செந்தமிழ்

தொகுதி 83 ஜூன் 89 பகுதி 2

ஆசிரியர் : என்.எஸ். முத்துமலைச்சாமி, பி.ஏ.,பி.எல்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1

பொறுப்பாசிரியர் : பேராசிரியர் டாக்டர். நா. பாலுசாமி
எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பிஎச்.டி.

செந்தமிழ்

தொகுதி 83 ஜூன் 89 பகுதி 2

பொருளடக்கம் பக்கம்

1. தமிழ், தெலுங்கு - சதகங்கள் ஒப்பீடு 3
டாக்டர் ப. பழனியம்மாள், எம்.ஏ.,பிஎச்.டி.
செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

2. நாவலின் வடிவமும் கட்டமைப்பும் 10
டாக்டர் ம. திருமலை, எம்.ஏ.,பிஎச்.டி.
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

3. வரகுண பாண்டியன் பள்ளிப்படை. 26
புலவர் செ. இராசு, எம்.ஏ.
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

4. அகராதி 29
டாக்டர் ஏ. ஆதித்தன், எம்.ஏ.,பிஎச்.டி.
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

5. பரிமேலழகர் உரை — சில செய்திகள் 50
டாக்டர் நா. பாலுசாமி, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பிஎச்.டி.

புதிய பொறுப்பாசிரியர்

வரலாற்றுப் புகழ் மிக்க மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் தொடர்ந்து வெளிவரும் சிறந்த ஆராய்ச்சி இதழான செந்தமிழின் புதிய பொறுப்பாசிரியராகப் பேராசிரியர் டாக்டர் நா. பாலுசாமி அவர்கள் பணியாற்ற இசைந்துள்ளார். இவர் 21-6-89 முதல் பொறுப்பேற்றுள்ளார். டாக்டர் நா. பாலுசாமி சிறந்த தமிழ்ப் பேராசிரியர்; உயர்ந்த ஆராய்ச்சியாளர். நல்ல நாவன்மையும் எழுத்தாற்றலும் பெற்றவர். ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு மேல் தமிழ்ப்பணி ஆற்றியவர். மதுரை அமெரிக்கன் கல்லூரி, மதுரைக் கல்லூரி, தியாகராசர் கல்லூரி ஆகிய மூன்று கல்லூரிகளிலும் தமிழ்ப் பணியாற்றியவர். தேவகோட்டை சீர்சேவுகன் அண்ணாமலை கல்லூரியின் தொடக்ககால முதல்வராக விளங்கியவர். இவர் தியாகராசர் கல்லூரியிலிருந்து 1981 - இல் ஓய்வு பெற்றபின், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகவும் துறைத் தலைவராகவும் இந்திய மொழிப்புல முதன்மையராகவும் ஆட்சிக்குழு உறுப்பினராகவும் சிறப்பாகப் பணியாற்றிப் புகழ் பெற்றவர். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஏறத்தாழ 5 ஆண்டுகள் வாழ்வியற் களஞ்சியத்தின் முதன்மைப் பதிப்பாசிரி

யராகப் பணியாற்றிப் பெருஞ்சிறப்புப் பெற்றவர். இப்போது மதுரையில் வழக்கறிஞராகப் பணிபுரிகிறார்.

இவர் இராமநாதபுரம் மாவட்டம் அருப்புக்கோட்டை வட்டம் வேடநத்தம் என்னும் சிற்றூரில் 1923-இல் பிறந்தார். பி.ஏ. வகுப்பில் பொருளாதாரம் பயின்றபின் எம். ஏ. தமிழ் இலக்கியம் பயின்றார். மணிமேகலைக் காப்பிய ஆராய்ச்சிக்காக எம். லிட். பட்டமும், இராமாயண ஆராய்ச்சிக்காக பிஎச்.டி. (டாக்டர்) பட்டமும் பெற்றவர். பல ஆராய்ச்சி மாணவர்களை டாக்டர் பட்டம் பெற வழிகாட்டியவர். தமிழகத்தில் இவர் கலந்து கொள்ளாத இலக்கிய மேடையே இல்லை என்று கூறிவிடலாம். இவர் 967-இல் சிங்கப்பூர், மலேசியா சென்று சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றினார். இவரது பேச்சாற்றலை வியந்து மதுரை ஞானசம்பந்தர் மடாதிபதி 'செஞ்சொற் சண்டமாருதம்' என்னும் பட்டம் சூட்டிச் சிறப்பித்தார். பல நூல்களின் ஆசிரியர். இந்தியப் பல்கலைக்கழகங்கள் பலவற்றில் பல்வேறு நிலைகளில் தொடர்பு கொண்டு அரும்பணியாற்றியவர். இலக்கியப் பட்டங்களுடன் சட்டத் துறையிலும் பி. எல். பட்டம் பெற்றவர். இத்தகைய சிறப்புக்கள் பல பெற்றுத் திகழும் பேராசிரியர் டாக்டர் ந. பாலுசாமி அவர்கள் எங்கள் வேண்டுகோளை ஏற்றுச் செந்தமிழ்ப் பொறுப்பாசிரியராகப் பணிபுரிவது பற்றி மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறேன். இவர் பணி சிறக்க இறைவனை இறைஞ்சுகிறேன்.

என். எஸ். முத்துமலைச்சாமி

செயலாளர்

தமிழ், தெலுங்குச் சதகங்கள் ஒப்பீடு

முன்னுரை :

சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று சதக இலக்கியங்கள். வடமொழி, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற இந்திய மொழிகளில் சதக இலக்கியங்கள் பாடப்பட்டுள்ளன. எனினும் தமிழில் நூற்றுக்கு மேற்பட்ட சதகங்களும், தெலுங்கில் ஐந்நூறுக்கு மேற்பட்ட சதகங்களும் தோன்றி வளர்ச்சி அடைந்துள்ளன. அதனால் அவ்விரு மொழிச்சதகங்களை ஒப்பிட்டு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

1) சதகம் என்ற பெயர்க்காரணம் :

நூல்களுக்கு எண்ணிக்கை அடிப்படையில் பெயர் கொடுத்து வழங்குவது பழந்தமிழர் மரபு. அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, நாலடி நானூறு, பதிற்றுப் பத்து, நானாற்பது போன்ற நூல்கள் பாடல்களின் எண்ணிக்கையைக் கொண்டு பெயர் பெற்றுள்ளன. நான்மணிமாலை என்பது நாற்பது பாடல்களைக் கொண்ட நூலாகும். மும்மணிக் கோவையும், மும்மணிமாலையும் முப்பது பாடல்களைக் கொண்ட அந்தாதி நூலாகும். இரட்டை மணிமாலை இணைமணிமாலை, இருபா இருபஃது என்பன இருபது பாடல்கள் கொண்ட நூல்களாகும். இவைகளைத் தவிர ஒருபா ஒருபஃது, நவமணிமாலை, அட்டமங்கலம் என்பன முறையே 10, 9, 8 பாடல்களால் ஆகிய அந்தாதி இலக்கியங்கள் ஆகும். இவ்வாறு பாடல்களின் எண்ணிக்கை அடிப்படையில் நூலுக்குப் பெயரிடும் பழந்தமிழர் மரபை ஒட்டி, நூறு பாடல்களைக் கொண்ட நூல் சதகம் என்று பெயர் பெற்றது. இதனை ஆங்கிலத்தில்,

'A poem of hundred stanzas'

என்று கூறுவர். எண்ணிக்கைக்கு உட்பட்ட பாடல்களை உடைய சிற்றிலக்கியம் இது ஒன்றே ஆகும்.

2) சதகம் என்ற சொல்லின் தோற்றம் :

'சதகம்' என்ற சொல் வடமொழிச் சொல்லாகும். வடமொழியில் சதம் என்றால் நூறு என்று பொருள்படும். சதம் என்ற சொல்லின் இடையில் 'க' என்ற ஓர் எழுத்துக் கூடி வருதலைக் 'க' ப்பிரத்தியயம் என்று வடமொழி வாணர்கள் கூறுவர். பாலன் என்ற சொல்லுடன் 'க' என்ற எழுத்துச் சேர்ந்து பாலகன் என்றாதல் போலச் சதம் என்ற சொல்லுடன் 'க' என்ற எழுத்துக் கூடிச் சதகம் என்றாயிற்று. எனவே சதகம் என்ற சொல்லுக்கு நூறுகொண்டது என்பது பொருள். பத்துப் பாடல்கள் கொண்டது பதிகம் என்று அழைக்கப்பட்டது போல நூறு பாடல்கள் கொண்ட நூல் சதகம் என்று அழைக்கப்பட்டது. வடமொழியில் கி.பி ஆறாம் நூற்றாண்டு முதல் சதக இலக்கியங்கள் தோன்றி வளர்ச்சி அடைந்தன. பர்த்ருஹரி எழுதிய நீதிசதகம். வைராக்கிய சதகம், சிருங்கார சதகம் ஆகியன கி.பி. ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்தன. நாட்டு வரலாற்றைச் சிறப்பிக்கும் வகையில் தமிழ்ப் புலவர்கள் சதகங்களைப் பாடினர். தெலுங்குக் கவிஞர்கள் பெருங்காப்பியங்களைப் படைப்பதற்கு முன்னர் கவிதை இயற்றுவதில் பயிற்சி பெறுவதற்காகவும் இறைவனின் அருளைப் பெறுவதற்காகவும் சதகம் எழுதினர். மேலும் சதகம் என்ற இலக்கியவகை வடமொழி, பிராகிருதம் ஆகிய மொழிகளிலிருந்து வந்து சிற்சில இலக்கண மாற்றங்களைப் பெற்றுத் தெலுங்கில் நிலை பெற்றன என்ற கருத்தும் காணப்படுகிறது. சதக இலக்கியங்கள் வடமொழியில் தோன்றிய பின்னரே தமிழிலும் தெலுங்கிலும் தோன்றின.

3) சதகத்தின் இலக்கணம் :

சதகம் என்ற சிற்றிலக்கியத்தின் அமைப்புக்களாக,

1) நூறு பாடல்கள் பாடப்பட்டிருத்தல்,

2) இறைவனையோ புலவர் தாம் பாட விரும்பிய ஏனையோரையோ பாட்டுடைத் தலைவர்களாகப் பாடுதல்,

3) நூறு பாடல்களும் ஒரே யாப்பில் அமைந்திருத்தல்,

4) நூறு பாடல்களும் ஒரே முடிவை மகுடமாகக் கொண்டு முடிதல்.

5) நூறு பாடல்களும் ஒன்றுகொன்று தொடர்பு இல்லாமல் தனித்தனிப் பாடல்களாக அமைதல்.

ஆகிய ஐந்தினைக் கூறலாம். கி.பி 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வைத்திய நாத தேசிகர் தாம் பாடிய இலக்கண விளக்கம் என்ற நூலில் சதகத்தின் இலக்கணத்தை,

"விளையும் ஒருபொருள் மேலொரு நூறு
தழைய வுரைத்தல் சதகமென்ப"

என்று கூறியுள்ளார். மேற்கூறிய இலக்கணத்தில் பாட்டுடைத் தலைவன் யாப்பு, மகுடம் போன்ற செய்திகளை விடுத்துப் புலவர்கள் தாம் பாடவிரும்பிய செய்திகளை நூறு பாடல்களில் பாடிமுடித்தல் வேண்டும் என்று பாடல்களின் எண்ணிக்கைக்கே முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழ் தெலுங்குச் சதகங்களில் புலவர்களின் உள்ளநிலைக்கேற்ப இந்த எண்ணிக்கை அளவு சற்று விரிந்தும் காணப்படுகின்றது. அருணாசல சதகம், எம்பிரான் சதகம், ஈழமண்டல சதகம், கொங்கு மண்டல சதகம் ஆகிய நூல்களில் 101 பாடல்கள் காணப்படுகின்றன. நந்த மண்டல சதகம், திருவேங்கட சதகம், கோவிந்த சதகம் போன்ற சதகங்களில் 102 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அண்ணாமலை சதகம், நடராச சதகம், திருத்தொண்டர் சதகம் ஆகிய நூல்களில் 103 பாடல்கள் பாடப்பட்டுள்ளன. தண்டலையார் சதகத்தில் 109 பாடல்களும், சுமதீ சதகத்தில் 110 பாடல்களும் அடங்கியுள்ளன.

தெலுங்குச் சதகங்களில் 109 பாடல்கள் வரை காணப்படுகின்றன. வேமனா போன்றோர் தமது சதக நூல்களில் ஆயிரக்

க்கணக்கான பாடல்களை எழுதியுள்ளனர். ஏனெனில் இறைவனைப் போற்றும் போற்றிப் பாடல்களில் இறைவனின் ஆயிரம் அல்லது நூற்றெட்டுப் பெயர்கள் இடம் பெறுவது இயல்பு. இறைவனின் நூற்றெட்டுப் பெயர்களுக்கேற்ப நூற்றெட்டுப் பாடல்கள் பாடப்பட்டிருத்தல் வேண்டும் என்ற வழக்குப்படித் தெலுங்குச் சதகங்களில் 108 பாடல்கள் அமைவது இயல்பாயிற்று. இவ்விதி பிற்காலத்தில் தோன்றிய சதகங்களிலும் பின்பற்றப்பட்டுள்ளது. இவ்வாறு தமிழ் தெலுங்குச் சதகங்களில் பாடல் எண்ணிக்கை நூறு என்ற வரையறையைக் கடந்துள்ளது.

4. மகுடம் அமைதல் :

சதகங்களில் ஒரு சொல்லோ ஒரு தொடரோ பாடல்கள் தோறும் மகுடமாக அமைந்திருத்தல் ஓர் இன்றியமையாத விதியாகும். பொதுவாக ஒவ்வொரு பாடலின் இறுதியிலேயே இம்மகுடம் அமைகிறது. நூலின் தலைப்புக்கேற்றவாறே மகுட அமைப்புக் காணப்படுகின்றது. தமிழில்,

கார்மண்டல சதகம்	—	'காராளர் மண்டலமே'
தொண்டைமண்டல சதகம்	—	'தொண்டை மண்டலமே'
எம்பிரான் சதகம்	—	'எம்பிரானே'
குருநாத சதகம்	—	'குருநாதனே குருநாதனே'

என்ற மகுடங்களைப் பெற்றுள்ளன. கயிலாசநாதர் சதகத்தில்'

"கற்ப கவிராச மேவுக் கங்கைபுனை யீசனே
மங்கை மகிழ் நேசனே கயிலையங்கிரி வாசனே"

என்ற தொடர் மகுடமாகக் காணப்படுகின்றது. தெலுங்கில்,

சுமதீ சதகம்	—	'சுமதீ'
வேமனசதகம்	—	'விஸ்வதாபிராம வினுரவேம'
தேவகீ நந்தன சதகம்	—	'கிருஷ்ணா தேவகீ நந்தனா'
மானஸ போத சதகம்	—	'மானஸ ஹரி பாதமு லாஸ்ரயிம்புமா'

என்ற மகுடங்களைப் பெற்றுள்ளன. கோகுலப் பாட்டி கூர்ம-நாதக்கவி எழுதிய சிம்ஹாத்ரி நரசிம்ம சதகத்தில்,

"வைரிரம்ஹ வர சிம்ஹாத்ரி நரசிம்ஹ"

என்ற தொடர் மகுடமாகக் காணப்படுகின்றது, இவ்வாறு மகுட அமைப்புப் பெறுவதில் தமிழ், தெலுங்குச் சதகங்கள் ஒன்று பட்டுக் காணப்படுகின்றன. மகுடமின்றிப் பாடப்பட்ட சதகங்களைக் காண்பதரிது. ஆனால் சில சதகங்களில் மகுட அமைப்பு ஈற்றடியிலன்றி ஈற்றயலடியில் (மூன்றாம் அடியில்) அமைந்திருக்கலாம்.

5. சதகங்களின யாப்பு :

ஒரு சதகத்தில் உள்ள நூறு பாடல்களும் ஒரே யாப்பில் பாடப்பட்டிருத்தல் வேண்டும் என்பது பொதுவிதி. இப்பொது விதிக்கு உட்பட்டே தமிழ்ச் சதகங்கள் ஆசிரிய விருத்தத்திலும், கலிவிருத்தத்திலும், கட்டளைக் கலித்துறையிலும் பாடப் பட்டுள்ளன. பெரும்பாலும் ஆசிரியவிருத்தமே அதிகமாகப் பயின்று வந்துள்ளது. விநாயகர் சதகம், அகத்தீசர் சதகம், முகியித்தீன் சதகம், வீரராகவ சதகம் முதலியன ஆசிரிய விருத்தத்திலும், முதல்வர் திருச்சதகம், மிழலைசதகம், மதினமாநகர் தோத்திர சதகம் ஆகியன கட்டளைக் கலித்துறையிலும், இராமலிங்க சதகம், சிவகுருசதகம் போன்றன கலிவிருத்தத்திலும் பாடப்பட்டுள்ளன.

தெலுங்குச் சதகத்திலும் முதற்பாடல் எந்த யாப்பில் அமைந்துள்ளதோ அதே யாப்பில் தான் அந்நூலில் உள்ள எல்லாப் பாடல்களும் அமைந்துள்ளன. வேமனாவின் சதகங்கள் யாவும் ஆட்டவெலதி யாப்பிலும் சுமதீ சதகம் கந்தயாப்பிலும், சிம்ஹாத்ரி நரசிம்ம சதகம் சீசயாப்பிலும் எழுதப்பட்டுள்ளன. மகாகவி விசுவநாத சத்திய நாராயணா எழுதிய விசுவநாத மத்தியக்கரலு என்ற தொகுப்பில் அடங்கிய பத்துச் சதகங்களும் மத்தியாக்கர என்ற யாப்பில் அமைந்துள்ளன.

தமிழ், தெலுங்கு முதலாகச் சதகங்களில் உள்ள பாடல்கள் ஒவ்வொன்றும் தனிப்பாடலாகவும், ஒரு தனிக் கருத்தைக் கூறுவதாகவும், தன்னளவில் முழுமை உடையதாகவும் திகழ்கிறது.

6. முதல் சதக இலக்கியங்கள் :

தமிழில் முதன் முதலாகச் சதகம் என்ற சொல்லைப் பயன்படுத்தி நூல் செய்தவர் மாணிக்க வாசகர் ஆவார். அவர் எழுதிய திருவாசகத்தில் திருச்சதகம் என்ற பெயர் காணப்படுகிறது. திருச்சதகத்தைச் சதக இலக்கியத்தின் தோற்றுவாய் என்று கூறலாம். ஆனால் சதகம் என்ற பெயர் உடையதாயினும் பிற சதக இலக்கியங்களின் அமைப்புடையதன்று. ஏனெனில் சதகம் என்பது ஒரு தனி நூலாகப் பாடப்பட்டிருத்தல் வேண்டும். திருச்சதகம் திருவாசத்தின் ஒரு பகுதியாக, அந்தாதி அமைப்புடையதாக அமைந்துள்ளது. இது சதக இலக்கணத்திற்கு முற்றிலும் மாறுபட்டது.

கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அவிநாசி ஆறைகிழார் என்பவர் தாம் வாழ்ந்த மண்டலத்தைச் சிறப்பித்துக் கார்மண்டல சதகத்தை இயற்றினார். நூறு பாடல்களில் கார்மண்டலத்தில் வாழ்ந்த வேளாளர்களின் பெருமைகளையும், ஆட்சி செய்த அரசர்கள், புலவர்கள், வள்ளல்கள், ஞானியர்கள் ஆகியோரின் வரலாறுகளையும் விளக்கியுள்ளார். சதகம என்ற நூல் வகை இத்தகைய அமைப்போடுதான் இருக்கவேண்டும் என்ற ஓர் அடிப்படை அமைப்பைக் கொடுத்தவர் ஆறைகிழார் என்பவரே ஆவார். இவரது காலமாகிய கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் தான் சதக இலக்கியம் தமிழில் தனியொரு சிற்றிலக்கிய வகையாகத் தழைத்தது.

தெலுங்கு இலக்கியத்தில் தோன்றிய முதல் சதகம் நன்னயாவால் எழுதப்பட்ட மகாபாரதமாகும். இந்நூலில் ஆதி பருவத்தில் உதங்கமுனிவர் நாகதேவதைகளை வழிபடும் பொழுது,

'மாக்கு பிரஸன்னு டய்யெடுன்'

(எங்களுக்கு அருள் புரிய வேண்டும்)

என்ற மகுடத்துடன் அமைந்த நான்கு தோத்திரப் பாடல்களைப் பாடியுள்ளார். இவை நான்கும் சதகப் பாடல்களைப் போல் காணப்படுகின்றன. நன்னேச் சோடுடு தமது குமாரசம்பவத்தில் சதக அமைப்பில் பத்துப்பாடல்களை எழுதியுள்ளார். இப்பாடல்கள்

'தாரித்ரய வித்ராவனா'

(தரித்திரத்தை விடுபவனே)

என்ற மகுடத்தைப் பெற்றுள்ளன. மேற்கூறிய இரு நூல்களும் சதக இலக்கண அமைப்பில் பாடப்படவில்லை. கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவப்புலவர் மல்லிகார்ஜுன பண்டிதர் ஐந்நூறு பாடல்கள் அடங்கிய 'சிவதத்துவசாரம்' என்ற நூலை எழுதியுள்ளார். இப்பாடல்கள் அஜா, ருத்ரா, சிவா என்ற வேறு வேறு மகுடங்களைக் கொண்டு முடிகின்றன. இதில் சதகம் என்ற சொல் காணப்படவில்லையாயினும் சதக இலக்கண அமைப்புடன் பாடப்பட்டுள்ளது.இவருக்குப் பின்னர் பால்குருக்கி சோமநாதர் விருஷாதிப சதகத்தை எழுதினார். சதக இலக்கணங்கள் யாவும் பொருந்தியுள்ள முதல் தெலுங்குச் சதகமாக விருஷாதிபசதகம் திகழ்கிறது.

தமிழிலும் தெலுங்கிலும் சதகம் என்ற சொல் தோன்றிய பின்னரே சதக இலக்கணங்கள் யாவும் பொருந்திய சதகநூல்கள் தோற்றம் பெற்றுள்ளன. தமிழில் முதலில் தோன்றிய சதகம் வரலாற்றுச் சதகம் என்பதும், தெலுங்கில் முதலில் தோன்றிய சதகம் வீரசைவ சதகம் என்பதும் குறிப்பிடத்தக்க செய்தி. (தொடரும்)

— டாக்டர். ப. பழனியம்மாள்

நாவலின் வடிவமும் கட்டமைப்பும்

முன்னுரை :

இலக்கியத் திறனாய்வில் வடிவம், கட்டமைப்பு என்ற சொற்கள் நுட்பமான பொருள் வேறுபாட்டுடன் எடுத்தாளப்படுகின்றன. பாடல், உரைநடை ஆகியவற்றைக் குறிப்பிடும் போது பா வடிவம், உரைநடை வடிவம் என்ற சொற்கள் பயன்படுத்தப் படுகின்றன. தனித்தனி நூல்களின் அமைப்பினைப் பற்றிய ஆய்வுகளில் கட்டமைப்பு (Structure) என்ற சொல் பயன்படுகின்றது. 'ஐங்குறுநூற்றின் கட்டமைப்பு', 'தொல்காப்பியப் புறத்திணையியல் அமைப்பு' என்ற தொடர்கள் நடைமுறையில் பரவலாகப் பயன்படுத்தப்படுவதைக் காணலாம். சிறுகதை, நாவல் போன்ற இலக்கிய வகைகளைப் பற்றிய ஆய்வின் போதும் கட்டமைப்பு என்ற சொல் தனி நூல்களைப் பற்றிய ஆய்வில் இடம் பெறுகின்றது. சில திறனாய்வாளர்களால் உருவம் என்ற சொல்லும் ஆளப்படுகின்றது.

வடிவம் :

வடிவம், கட்டமைப்பு, அமைப்பு, உருவம் ஆகிய சொற்கள் பெரும்பான்மையான இடங்களில் எடுத்தாளப்படும் சூழல்களை வைத்துப் பார்க்கும்போது, வடிவம் என்ற சொல் பொதுவான ஒரு தொகுதியைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப் படுகின்றதை உணர முடியும்; நூல்களின் தொகுதியையும், ஒரு குறிப்பிட்ட நூலின் கட்டமைப்புக் கூறுகளுடன் இலக்கிய உத்திகள் இணைந்திருக்கின்ற தொகுதியையும் குறிக்க வடிவம் என்ற சொல் பயன்படுவதை உணரலாம்.

தனியொரு நூலினைப் பற்றி ஆராய்கின்ற திறனாய்வாளர்களுள் உருவம் என்ற சொல்லைப் பயன்படுத்துவோர் அச்சொல்லை வடிவம் என்ற பொருளில்தான் ஆள்கின்றனர். இத்-

தகைய ஆய்வுகளில் ஒரு குறிப்பிட்ட கதையின் நிகழ்ச்சிகளின் வைப்பு முறை பற்றிய ஆய்வினை விடவும் கதையில் வெளிப்படும் உணர்வு நிலை பற்றிய ஆய்வே முதன்மை இடம் பெறுகின்றது. சி.சு. செல்லப்பா, க நா. சுப்பிரமணியம் போன்ற திறனாய்வாளர்கள் தமிழ்ச் சிறுகதை பற்றி எழுதியுள்ள பல்வேறு கட்டுரைகள் இவ்வகையில் நோக்கத்தக்கன. இவ்விடத்து இலக்கியத்தின் வடிவமைப்புப பற்றிக் கூறுகின்ற ஆர். எஸ். கிரேன் (R S. Crane) என்பாரின் பின் வரும் கருத்து ஒப்பு நோக்கத்தக்கது. "ஒவ்வொரு இலக்கிய நூலும் வாசகர்களிடையே ஒவ்வொரு வித உணர்ச்சியை விளைவிக்கிறது. இந்த உணர்ச்சி ஆற்றலே அவ்விலக்கிய நூலின் உருவாக்கும் கோட்பாடு ஆகும்"[1]

ஓர் இலக்கிய நூலின் வடிவம் என்பது பரந்துபட்ட நிலையினை உடையது. நூலாக்கத்தின் அமைப்பினை உருவாக்கும் அடிப்படையான நிகழ்ச்சிகளுடன், அந்நிகழ்ச்சிகள் கூறப்படும் முறை, உணர்வுகளை மிக ஆழமாகப் புலப்படுத்தும் உத்திகள் (உருவகம், உவமை, குறிப்புப் பொருள், முரணுரை போல்வன) ஆகியவை இணைந்து கிடைக்கின்ற தொகுதியை வடிவம் எனலாம். இலக்கிய உத்திகள் ஏதுமின்றி, ஓர் இலக்கியம் ஆக்கத்தின் அடிப்படையான நிகழ்ச்சிகளின் கோவையைக் கட்டமைப்பு என்று கூறலாம். கட்டமைப்பு என்பதைப் பற்றி அமெரிக்கப் புதுத் திறனாய்வாளர்கள் கூறும் கருத்து, வடிவம் பற்றிய சிந்தனையை ஒட்டியதாகக் காணப்படுகின்றது. அக்கருத்து பின்வருமாறு: "கட்டமைப்பு என்பது ஒரு கவிதையின் வெளி அமைப்பைக் குறிப்பதன்று; ஒரு கவிதையில் பயன்படுத்தப்படும் பலதரப்பட்ட சொற்களும் உருவகங்களும் (images) முரண் குறிப்பு (irony) மூலமும் முரணுரை (paradox) மூலமும் ஓர் இழுவிசையினை (tension) உண்டாக்கி அந்த இழுவிசையே கவிதையில் ஒரு சமநிலையை (equilibrium) ஏற்படுத்துகிறது. ஒரு கவிதையில் முழுப் பொருண்மைக்கு (totality of meaning) இந்தச் சமநிலையே அடிப்படை."[2] இது ஓர் இலக்கிய படைப்பின் முழுமையான பயன் என்று கூறலாம். அமெரிக்கப் புதுத் திறனாய்வாளர்களின் இக்கருத்து, வடிவம் என்பதற்குக் கூறப்படும் விளக்கத்தினைப் போலவே அமைந்-

துள்ளது; கட்டமைப்பு பற்றிய விளக்கமாக இது கூறப்படினும் உண்மையில் இது வடிவம் பற்றியதே.

கட்டமைப்பு :

ஓர் இலக்கியப் படைப்பில் பயன்படுத்தப்படும் பல்வேறு உத்திகளையும், உணர்வு வெளிப்பாட்டுக் கூறுகளையும் தாங்கி நிற்கும் ஒன்று தேவையல்லவா? அந்த ஒன்று எது என்று காண்பது மிகவும் அடிப்படையானது; அதுவே கட்டமைப்பு.

மனித உடலின் எழில் தோற்றங்கட்குக் காரணமான உறுப்புக்களாகிய தசைப்பகுதிகள், வண்ணம் போன்றவை ஒரு மனிதனின் வடிவமைப்பைத் தீர்மானிக்கின்றன. எனினும் அவற்றைத் தாங்கி நிற்பது எலும்புக் கூட்டின் அமைப்புதானே! ஓர் இலக்கியப் படைப்பிலும் வடிவமைப்புக் கூறுகளைத் தாங்கி நிற்கின்ற அடிப்படையாகக் கட்டமைப்பு என்பதைக் கொள்ளலாம்; இலக்கியப் படைப்பில் இவ்வடிப்படை என்பது நிகழ்ச்சிகளாகத் தான் இருக்க முடியும். ''கட்டமைப்பு என்பது அதன் அடிப்படைப் பொருளில் (கதை அமைப்பு) ஒரு நூலின் எலும்புக் கூடாகும். இழையோட்டம்(செய்யுளடி, சொல்லாட்சி, சொற்றொடர் அமைப்பு) எலும்பின் போர்வையான தோல் ஆகும்''[3] என்றும், ''நாவலில் இடம்பெறும் நிகழ்ச்சிகளை ஒழுங்குபட அமைக்கின்ற திட்டமே வடிவமைப்பு என்று கூறலாம்''[4] என்றும் கூறப்படுகின்ற கருத்துக்கள் ஒப்பிட்டு நோக்கத்தக்கன.

மேற்கூறப்பட்ட கருத்துக்களின் பின்னணியில் காணும் போது ஒரு நாவலின் கட்டமைப்பு என்பது கதை நிகழ்ச்சிகளின் வைப்பு முறை என்று கொள்ள இடமேற்படுகின்றது. நாவல் திறனாய்வுலகில் இதனைக் கதைப் பின்னல் என்று குறிப்பிடுவர்.

இ. எம். பாஸ்டர் என்பார், கால வரிசை சிதறாமல் அமைத்து வைக்கப்பட்ட நிகழ்ச்சிகளின் தொகுப்பைக் கதை என்றும், அவற்றுள் காரண காரிய இயைபு காணப்படுமாயின் கதைப்பின்னல் என்றும், அதுவே ஆர்வ நிலையைத் தூண்டுவதாக அமையின் ஆர்வநிலைக் கதைப்பின்னல் என்றும் குறிப்பிடுவர்.[5] இ.எம். பாஸ்டரின் விளக்கங்களில் அடிநாதமாகத் திகழ்வது, நிகழ்ச்சிகள் கால வரிசைப்படி அமைதலாகும்; இதன் இயல்பினையொட்டி சிக்கல் தோற்றம், வளர்ச்சி, உச்ச நிலை விடுவிப்பு, முடிவு என்ற கூறுகளடங்கிய போராட்டம் (Conflict) கதைப் பின்னலில் முதன்மையான இடம் பெறுகின்றது. நாவல் இலக்கியம் தோன்றி வளரத் தொடங்கிய காலங்களில் தனி மனிதனொருவனின் வாழ்க்கை நிகழ்ச்சிகளின் பின்னணியில் கதை வளர்த்துச் செல்லப்பட்டது; எனவே அவற்றில் இத்தகைய அமைப்பு காணப்பட்டது.[6] எனவே ஒரு நாவலின் கட்டமைப்பினைத் தீர்மானிக்கின்ற கூறுகளாக இவை அமைந்திருக்கும் நிலையில், கதைப் பின்னலையே நாவலின் கட்டமைப்பாகக் கொள்ளலாம். ஆயின் நிகழ்ச்சி அலகுகளிடையே காரண காரிய இயைபு, போராட்டம் ஆகியவை இன்றி அமைந்திருக்கின்ற நாவலுக்கும் ஒரு கட்டமைப்பும் அதற்கென ஒரு வடிவமும் இருக்குமல்லவா? கதையம்சம் இல்லாதிருக்கின்ற நகுலன் போன்ற நாவலாசிரியர்களின் படைப்புக்கள் இவ்வகையில் சிந்திக்கத்தக்கன.

கட்டமைப்பின் இரு கூறுகள் :

காலப்போக்கில் நாவல் இலக்கியம் பல்வேறு வளர்ச்சி நிலைகளை அடைந்த போது கதை நிகழ்ச்சிகளுக்கு முதன்மை கொடுக்கப்படும் நிலை குறைந்தது. கருத்து விளக்கங்கள், கதை மாந்தர் பண்பு விளக்கங்கள், உணர்ச்சி நிலைகள் போன்றவை முதன்மைபெறத்தொடங்கின.எனவேஇதற்கேற்றவாறுநாவல்களின் கட்டமைப்புக்களில் மாற்றங்கள் ஏற்பட்டன. நிகழ்ச்சிகளின் வைப்பு முறையில் காணப்பட்ட கால ஒழுங்கு சிதைந்தது. இவ்விடத்தில் பின்வரும் கருத்து ஒப்பு நோக்கத்தக்கது. "இலக்கியம் வாழ்க்கையன்று; எனவே அது வாழ்க்கையைப் போல் இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்னும் கருத்தினைக் கொண்டு கால நெறி

முறையினைப் பற்றிக் கவலை கொள்ளாமல் சிக்கலான முறையில் நிகழ்ச்சிகளை மட்டும் அமைத்து இக்காலத்தில் எழுதுகின்றனர்[7]. படைப்புலகில் பரவலாக நிலைபெற்றுவிட்ட மேற்கூறப்பட்ட மாற்றங்களையும் கருத்தில் கொண்டு கோட்பாட்டுகள் வகுக்கப்பட வேண்டும். இவ்வடிப்படையில் ஜான்ஹால்ப்ரின் என்ற திறனாய்வாளரின் கருத்துக்கள் சிந்திக்கத்தக்கன. ஜான் ஹால்ப்ரின் கருத்துப்படி, ஒரு நாவலின் கட்டமைப்பில் இரண்டு கூறுகள் முதன்மையானவை; நாவலின் உட்கதையமைப்பு, நிகழ்ச்சிக்கட்டமைப்பு என்பன அவை.[8] இவற்றுள் உட்கதையமைப்பு என்பது ஒரு நாவலின் காலவரிசைப்படியான நிகழ்ச்சி அலகுகளின் வைப்பு முறையாகும்; அதாவது மிகச்சிறிய, மேலும் குறைக்க முடியாத, கதைப் போக்கிற்கு அடிப்படையாக அமைவதும் வாசகர் தாமே உணர்ந்து அமைத்துக் கொள்ளத்தக்கதுமான நிகழ்ச்சி அலகுகளின் (thematic units) வைப்பு முறையே உட்கதையமைப்பு எனப்படும்; நாவலின் உயிர்க் கருவான பகுதி இது. நிகழ்ச்சிக்கட்டமைப்பு என்பது ஒரு நாவலில் கதை நிகழ்ச்சிகள் படைப்பாளியின் கலைத்திறனுக்கு ஏற்ற முறையில் அமைக்கப்பட்டிருக்கும் முறையைக் குறிப்பதாகும்; நாவலின் முதற்பக்கம் தொடங்கி இறுதிப்பக்கம் வரை படைப்பாளியின் கைவண்ணத் திறத்தும், கலைத்திறனுக்கும் ஏற்ப நிகழ்ச்சிகள் வைக்கப்பட்டிருக்கின்ற வைப்பு முறையே நிகழ்ச்சிக் கட்டமைப்பு ஆகும். இவ்வடிப்படையில் ஒரு நாவலுக்கு இரண்டு கட்டமைப்புக்கள் உள என்று கூறலாம். "ஓர் இலக்கியப் படைப்பிற்குப் பருப்பொருள் கட்டமைப்பும் (அச்சில் தோன்றுவது) உளவியல் கட்டமைப்பும் (இனங் கண்டு கொள்ள முடிந்து, ஆனால் நேரில் காண முடியாதது) உள்ளது போல்தான் தோன்றுகிறது[9]. என்ற கருத்தும் இவ்விடத்தில் கருத்தில் கொள்ளத்தக்கது.

நாவலின் நுவல் பொருளை விளக்கும் வகையில் நாவல் முழுவதும் ஊடுருவிச் செல்கின்ற கருத்திழையோட்டத்தைச், சில

அடிப்படை நிகழ்ச்சிகளே விளக்கவல்லன; இவற்றை ஒருங்கிணைத்து உருவாக்குவது கட்டமைப்பு. காவியங்களின் அடிப்படை நோக்கு புலப்படும் வண்ணம் செயல்கள் அமைவதும், அவை வெளிப்படுவதும் பாவிகம் எனும் அணியால் விளக்கப்படுகின்றன. எனவே அடிப்படையான இழையோட்டம் உளவியலுடன் தொடர்புடையது என்றும், நிகழ்ச்சிகளின் வைப்பு முறை புற அமைப்பு என்றும் கூறலாம். இதற்கு அரணாகப் பின்வரும் கருத்தையும் ஒப்பு நோக்குதல் நன்று.

"இயற்கையோ செயற்கையோ, வடிவானது கட்டமைப்பு உடையதாகவோ அல்லது இழையோட்டத்துடனோ (texture) இருக்க வேண்டும். முன்னது விரிவானது; ஏனெனில் அது புற அமைப்பு, பின்னது குறுகியது; கலைஞனின் மன நோக்கினால் ஆன அக அமைப்பு."[10] எனவே ஒரு நாவலை, அதற்கு அடிப்படையாக அமைகின்ற அதன் கருத்திழையோட்டம், கருத்திழையோட்டத்தைத் தாங்கி நிற்கும் கட்டமைப்பு, பிற இலக்கிய உத்திகளுடன் கட்டமைப்புக் கூறுகள் இணைந்து உருவாக்கும் அழகிய வடிவம் என்ற மூன்று நிலைகளில் அணுகலாம். நனவோடை, பின்னோக்கு, நோக்கு நிலை, தலைப்புக்கள், உரையாடல், பாத்திரவார்ப்பு போன்ற உத்திகள் (techniques) அடிப்படைக் கட்டமைப்புடன் (structure) இணைந்து ஒரு நாவலுக்கு வடிவமைப்பினை (form) நல்குகின்றன என்று ஒருவாறு துணியலாம்.

கட்டமைப்பைக் காணல் :

ஒரு நாவலின் முழு வடிவினை உருவாக்குகின்ற இலக்கிய உத்திகளையும் நிகழ்ச்சி அலகுகளையும் தனித்தனியே பகுத்து நிகழ்ச்சி அலகுகளைக் காலவரிசைப்படி ஒழுங்குபடுத்தி அமைக்க வேண்டும். சான்றாக ஒரு நாவலின் நிகழ்ச்சி அலகுகளை,

நி$_1$ நி$_2$ நி$_3$ நி$_4$ நி$_5$ — என்று பிரித்து அமைக்கலாம். இந் நிகழ்ச்சி அலகுகள் இங்ஙனம் உள்ளவாறே மாற்றமேதுமின்றி

நாவலின் புறவடிவிலும் அமைந்திருந்தால் அதனையே நாவலின் கட்டமைப்பு என்று கொள்ளலாம். ஆயின் இந்நிகழ்ச்சி அலகுகள் முன் பின்னாக முறைமாறி நாவலின் புற வடிவில் அமைந்திருப்பின், அத்தகைய முறை மாற்றத்திற்கான காரணங்களை உய்த்துணர வேண்டும்; அதிற்கிடக்கும் கலைநலத்தினையும் ஆராய வேண்டும். சான்றாக ஒரு நாவலின் கட்டமைப்பு முறை மாற்றம் பெற்று, பின்வருமாறு அமைந்திருக்கலாம்.

நி$_3$ நி$_2$ நி$_1$ நி$_4$ நி$_5$ — இங்ஙனம் முறை மாறிக் கிடப்பதன் செம்மையும் சீர்மையும் நாவலாசிரியனின் கலைத்திறன், நாவலின் நுவல்பொருள் ஆகியவற்றைப் பொறுத்தே அமைந்திருக்கும்.

ஒரு மனிதன், ஒரு வீடு, ஒரு உலகம் :

கட்டமைப்பு பற்றி மேற்கூறப்பட்ட செய்திகளின் பின்னணியில் 'ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்' நாவலின் கட்டமைப்பினைக் காணலாம். இந்நாவலில் தலைமைமாந்தரான ஹென்றியை மையமாகக் கொண்டு கதை நிகழ்ச்சிகள் சுழல்கின்றன. தனிமனிதர்களிடம் ஆழமாகக் குடிகொண்டிருக்கின்ற நற்பண்புகளைக் காட்டுவதே நாவலின் நோக்கமாக அமைந்திருக்கின்றது. எனவே பண்பு விளக்கத்திற்கு உறுதுணையாக அமையும் அளவிற்கு மட்டுமே நிகழ்ச்சிகள் அமைந்திருக்கின்றன. இந்நாவலின் நிகழ்ச்சி அலகுகளைப் பின்வரும் முறையில் எட்டுக்கூறுகளாகப் பகுக்கலாம்.

நி 1 :- ஹென்றியின் தந்தை சபாபதிப் பிள்ளையின் திருமணம்; அவர் மனைவி ஊர்ப் பரியாறி ஒருவனுடன் ஓடிப் போதல்; அதனால் சபாபதிப் பிள்ளையும் ஊரை விட்டுப் போதல்

நிலை :- ஊரை விட்டுத் தனியே போன சபாபதிப் பிள்ளை ராணுவத்தில் பணியாற்றுதல்; அங்கு மைக்கேல் என்பவருடன்

நட்புறவு கொள்ளுதல்; மைக்கேலின் இறப்புக்குப் பின்னர் அவர் மனைவியைத் தன்னுடன் வைத்துக் காப்பாற்றி வருதல்.

நி 3 :- மைக்கேல் இறந்த பின்னர் சபாபதிப்பிள்ளை போர் முனையிலிருந்து மைக்கேலின் மனைவியுடன் தப்பி வரும் போது, குண்டு வீச்சுக்களுக்குக்கிடையே ரயில்பெட்டியில் அனாதையாகக் கிடந்த ஹென்றியைத் தூக்கி வருதல்.

நி 4 :- ஹென்றியின் வளர்ப்புத் தந்தையான சபாபதிப் பிள்ளை வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர், ஹென்றியிடம் எல்லா விவரங்களையும் கூறுதல்; சொத்துக்களுக்கு ஹென்றியை சட்டப்படி வாரிசாக்கும் பத்திரங்களைத் தயார் செய்தல்.

நி 5 :- ஹென்றி தன் தந்தையின் ஊரான கிருஷ்ணராஜ புரத்திற்கு வருதல்; அங்கு தேவராஜன் என்ற பள்ளியாசிரியரின் நட்பு கிடைத்தல்.

நி 6 :- ஹென்றி, தான் சபாபதிப் பிள்ளையின் மகன் என்பதையும் அவருடைய சொத்துக்களுக்குரிய வாரிசு என்பதையும் விளக்கும் சான்றுகளை ஊர்ப் பெரியவர்களிடம் காட்டுதல்; சபாபதிப் பிள்ளையின் தம்பியான லாரி டிரைவர் துரைக்கண்ணு தானே முன்வந்து அதுவரை தான் அனுபவித்து வந்த, சபாபதிப் பிள்ளையின் சொத்துக்கள் அனைத்தையும் ஹென்றிக்கு எழுதிக் கொடுத்தல்.

நி 7 :- ஹென்றி தன்னைச் சபாபதியின் மகன் என்று அனைவரும் ஒப்புக்கொண்ட பின்னர், தனக்கு அந்த அங்கீகாரமே போதும் என்றும் சொத்துக்கள் எதுவும் வேண்டாம் என்றும் கூறி மறுத்து விடுதல்.

நிர் 8 :- ஹென்றி ஊரார் அனைவரின் அன்புக்கும் உரியவனாக கிராமத்தில் உலவுதல்; சபாபதிப் பிள்ளையின் வீட்டை, முன்பிருந்தது போலவே மீண்டும் புதுப்பித்து அவ்வீட்டில் வாழ்தல்.

'ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்' நாவலுக்கு முழுமையான வடிவம் தரும் உட்கதையமைப்பு அல்லது அக அமைப்பு மேற்காட்டியவாறுள்ளது. நாவலில் மேற்கூறப்பட்ட நிகழ்ச்சிகள் மேலேயுள்ளவாறு கால வரிசைப்படி அமையவில்லை கீழ்க்கண்டவாறு வரிசை முறைமாறி அமைந்திருக்கின்றது

நி5 நி2 நி3 நி4 நி1 நி6 நி7 நி8

நாவலின் புறவடிவு அல்லது நிகழ்ச்சிக் கட்டமைப்பில் சபாபதிப் பிள்ளையின் வரலாறு (நி1 நி2), ஹென்றியின் வரலாறு (நி3), சபாபதிப் பிள்ளையின் சாவு (நி4) போன்ற செய்திகள் அவை நிகழ்ந்தவாறே கால வரிசைப்படி கூறப்படவில்லை. மாறாக ஹென்றி கிருஷ்ணராஜபுரத்திற்கு வருகின்ற செய்தி முதலில் கூறப்படுகின்றது. (நி5) தலைமை மாந்தரான ஹென்றி முதன் முதலில் நாவலின் அறிமுகப்படுத்தப்படுவதில் தொடங்கி அவன் யார்? எந்தச் செயலை முன்னிட்டு கிருஷ்ணராஜபுரத்திற்கு வந்திருக்கிறான்? என்ற விவரங்களைத் தேவராஜன் புரிந்து கொள்ளும் வரை சிறு சிறு நிகழ்ச்சிகள் மூலம் ஹென்றியின் பண்பு நலன்கள் வெளிப்படுத்தப் படுகின்றன; கிருஷ்ணபுரம் ஊர் மக்களின் செயல்கள், பழக்க வழக்கங்கள் ஆகியனவும் வெளிப்படுத்தப்படுகின்றன.

முறை மாற்றத்தின் காரணம் :

சபாபதிப் பிள்ளை, தன் மீது மிகுதியான பற்று வைத்திருந்ததைத் தனக்குணர்த்தும் முறையில் அவரது செயல்களும் கூற்றுக்களும் அமைந்திருந்ததை ஹென்றி நினைவு கூர்கிறான். சபாபதிப் பிள்ளையின் வாழ்க்கையில் ஏற்பட்ட பல துன்பகரமான அனுபவங்கள் அவரது மனத்தை மிகவும் பக்குவப்படுத்தி, எதையும் பற்றற்று நோக்கும் மனநிலையை வளர்த்திருந்தன. அத்தகைய துன்பகரமான அனுபவங்களுள் ஒன்றான, அவரது நண்பர் மைக்கேலின் இறப்பு இரண்டாவது நிகழ்ச்சியாக நாவலில் கூறப்படுகின்றது. (நி2).[11]

கதை மாந்தர் பண்பின் விளைவு:

ஒவ்வொருவனின் வாழ்விலும் ஏற்படும் நிகழ்ச்சிகள் அவனது கட்டுப்பாட்டிற்குள் அடங்குவன அல்ல என்று கருதும் பண்புடையவர் சபாபதிப்பிள்ளை; அவரது வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவங்களே அவரை அவ்வாறு சிந்திக்கத் தூண்டுகின்றன: "நான் கையிலே துப்பாக்கி பிடிச்சுச் சண்டை போடுவேன்னு யாராவது நினைச்சிருந்தாங்களா? ஐயோ! இந்தக் கையினாலே எவ்வளவு பேரை நான் சுட்டுத் தள்ளி இருப்பேன்! இப்போ அதே கையாலே ரயில் இன்ஜின்லே கரிவாரிக் கொட்டிக் கிட்டிருக்கேன். என்னுடைய சின்னவயசு வாழ்க்கைக்கும் இதுக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டுங்களா"[12]. இத்தகைய பண்புடைய சபாபதிப் பிள்ளை, போர் முனையிலிருந்து தப்பி வரும் போது தெய்வாதீனமாகத் தனக்கு ஹென்றி கிடைத்ததை நினைகூர்ந்து கூறுகிறார். இது மூன்றாவது நிகழ்ச்சியாகக் கூறப்படுகிறது. ஹென்றியின் எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்படும் நிலையில், அதனுடன் தொடர்புடைய வகையில் அவனைப் பற்றிய முன் வரலாறு கூறப்படுகின்றது (நி3)[13].

ஹென்றியைத் தனக்குக் கடவுள் அருளால் கிடைத்த வரம் என்று கருதும் சபாபதிப்பிள்ளை, தனக்குப் பின்னர் ஹென்றி துன்புறக் கூடாது என்று கருதி, தன் சொத்துக்களை அவனுக்குச் சட்டப்படி உரிமையாக்கும் பத்திரங்களைத் தயார் செய்கிறார் (நி4)[14]. இந்த இடத்தில் சபாபதிப்பிள்ளையின் முன் வரலாற்றை ஹென்றி தெரிந்து கொள்வது இன்றியமையாதது; எனவே, தன் மனைவி ஓடிப்போனது, தாய் ஊரை விட்டு வந்தது, தன் தம்பி துரைக்கண்ணுவின் செயல்கள் அனைத்தையும் சபாபதிப் பிள்ளை ஹென்றியிடம் கூறுகிறார் (நி1)[15]. இந்நிகழ்ச்சிகள் மிகவும் விரிவாக நாவலில் கூறப்படுகின்றன; இவை பின்னோக்கு உத்தியின் மூலம் கூறப்படுகின்றன.

நிகழ்ச்சிகள் கூறப்படும் முறை:

ஹென்றி, தேவராஜனுடன் நட்புக் கொண்டு அவனது இல்லத்தில் இரவில் தங்கியிருக்கும் போது, எதிரே இடிந்து

கிடக்கும் வீட்டைப் பார்த்து, அது தன் தந்தையின் வீடுதான் என்பதை உணர்ந்து கொள்கிறான். இரவில் தனிமையில் அந்த வீட்டைப் பார்க்கும் போது, அதில் தன் தந்தையின் குரல் ஒலிப்பதாக உணர்கிறான்; ''மகனே... பப்பா''[16] — என்று பின்னோக்கு உத்தி நாவலில் தொடங்குகிறது. இப்பின்னோக்கில் தான் நி2 நி3 நி4 நி1 ஆகிய அனைத்துச் செய்திகளும் கூறப்படுகின்றன; சபாபதிப் பிள்ளை ஹென்றியிடம் கூறுகின்ற முறையில் இவை வாசகருக்குக் கூறப்படுகின்றன. இப்பகுதி, நாவலில் ஏறத்தாழ 36 பக்கங்கள் வரை நீண்டு செல்கின்றது.

'ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்' நாவலில் முதல் நிகழ்ச்சியாகக் கூறப்படுவது ஹென்றியின் வருகையாகும். பின்னர் சிறுசிறு நிகழ்ச்சிகளின் மூலம் ஹென்றியின் பண்பு நலன்கள் விளக்கப்படுகின்றன. இப் பண்பு நலன்களுக்குக் காரணமான ஹென்றியின் பழைய வாழ்க்கைச் சூழல்கள் பின்னோக்கு உத்தியில் கூறப்படுகின்றன. சபாபதிப் பிள்ளையின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் முழுவதையும் வரிசைப் படுத்தி ஆசிரியர் கூற்றாகக் கூறுவது இயலாது. எனவே அந்நிகழ்ச்சிகள் பின்னோக்கு உத்தியின் மூலம் கூறப்படுகின்றன; பாத்திரப்படைப்புக்கு உகந்த வகையில் தக்க இணைப்புகளின் மூலம் இவை கூறப்படுதல் நாவலாசிரியனின் கலைநோக்கினைக் காட்டுகின்றது. இங்ஙனம் முறைமாற்றிக் கூறப்பட்ட இந்நிகழ்ச்சிகள், நாவலின் பின்னிகழ்வுகளுக்குரிய (நி6 நி7 நி8) களமாகவும் அமைந்திருப்பது சிறப்பு.

நாவலின் முதன்மை நோக்கம்? யாது?

'ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்' நாவலின் கட்டமைப்பு மேற்காட்டியவாறு அமைந்திருக்கின்றது. இதற்குரிய காரணத்தைக் காணலாம். இந்நாவல் எழுதப்பட்டதன் நோக்கத்தை ஜெயகாந்தன், ''மனிதனுக்கு இந்த வாழ்க்கையைப் பற்றிய பயமும் பற்றும், கதை கதையாக அமைந்த தனி மனிதர்களால் உருவாகும் வாழ்க்கை பற்றிய வரலாறும் இந்த வாழ்க்கையைப் பற்றிய ஒரு தனிமனிதனுடைய நிறைவும், பயமும் நம்பிக்கையும் இந்நாவல்

பிறக்கக் காரணமாயின"![17] என்று குறிப்பிடுகின்றார். எவ்விதமான கணிப்புக்கும் உட்பட்டுவிடாத வாழ்க்கைப் போக்கினைப் பற்றித் தனி மனிதன் ஒருவனின் பார்வை, இந்நாவலுக்கு அடிப்படையாக அமைந்தது என்று இதன் மூலம் உணர முடியும்.

எளிமையான உயர்ந்த மனிதப் பண்புகளைத் தேடுதலும் அவற்றின் தரிசனமும் இந்நாவலின் மூலம் தனக்குச் சாத்தியமாயின என்கிறார் ஜெயகாந்தன்; "வாழ்க்கையின் இருண்ட பகுதிகளையே காட்டுகிறவன் என்று என்னைப் பற்றி பாமரத்தன மான ஓர் இலக்கிய அபிப்பிராயம் இருக்கிறது. ஆனால் இந்தக் கதை வாழ்க்கையின் ஒளி மிகுந்த பகுதிகளை மட்டுமே காட்டு கிறது. மனிதர்களின் பலவீனத்தையே அழுத்தம் தந்து ஆணி அறைந்து காட்டுவதை நான் எனது நோக்கமாகவோ செயலாக வோ எப்போதும் கொண்டிருந்ததில்லை. எளிமையும், அதே சமயம் உயர்வும் மிகுந்த மனிதப் பண்புகள் என்னை எப்போதும் வசீகரிக்கின்றன."[18]

கிராம வாழ்க்கையின் எளிமை, அழகு, தனித்தன்மைகள் ஆகியவற்றைக் காட்டுவதும் இந்நாவலின் நோக்கங்களுள் ஒன்று. இதனைப் பின்வருமாறு ஜெயகாந்தன் குறிப்பிடுகின்றார்: "நமது வாழ்க்கையில் படித்த முட்டாள்களும் பாமர ஞானவான்களும் நிறைந்திருக்கின்றார்கள். நகரம் வேஷம் போட்டுக் கொண்டு திரிகிறது. கிராமம் அழகிய இயற்கை சூழலில் தானும் ஓர் அழகு; இயற்கையின் வதனத்தில் தான் ஒரு சிந்தூரத் திலகம் என்றெல்லாம் தெரியாமல் உழைப்பை யோகமாய்ப் பயின்று வாழ்கிறது".[19] மேற்காட்டப் பெற்ற கருத்துக்களின் மூலம், இந்த வாழ்க்கையைப் பற்றிய தனிமனிதர்களின் உணர்வுகளைக் காட்டுதல், எளிமையும் உயர்வும் மிகுந்த மனிதப் பண்புகளைத் தேடல், கிராம வாழ்க்கையின் எளிமை, அழகு ஆகியவற்றை வெளிப்படுத்துதல் என்பனவே நோக்கங்களாக அமைந்திருக்கின்றன என்பதை உணர முடியும். இந்நோக்கங்கள் அனைத்துமே பண்படிப்படையின; செயல் அடிப்படையினவல்ல. எனவே அடிப்படையில் செயல்திறம் குன்றியதாகவே இந்நாவலின் கரு (theme) காணப்படுகின்றது.

படைப்பாளியின் மனநிலை :

மன உணர்வுகள் சம்பந்தப்பட்ட நோக்கங்களையுடைய இந்நாவலை எழுதும்போது நாவலாசிரியருக்கு இருந்த மனநிலைகளைக் காணுதல் இன்றியமையாதது. நாவலாசிரியரின் கூற்றுக்கள் பின்வருமாறு : "நான் எனது சூழ்நிலைக்கேற்ப, எனது இயல்பு கெடாமல் சூழ்நிலையில் கரைந்து போகாமல் அவற்றைச் சரியாகவே பிரதிபலிக்குமாறு படைக்கப்பட்டிருக்கின்றேன். சூரியனின் கதிர்கள் எல்லாப் பொருள்களின் மீதும் படுகிறது. ஆனால் அந்தச் சூரியனையே ஒரு கண்ணாடியோ கையளவு தண்ணீரோதான் திரும்பவும் காட்டும். அப்படி ஒரு சிறிய கண்ணாடி நம்முள் எங்கேயோ ஒட்டிக் கொண்டிருப்பது சர்வ சாத்தியம். நான் அதன் மினுக்கங்களை 'இந்த வாழ்க்கையின் எத்தனையோ இருளிலும் காண்கிறேன்.''20

கனவு நிலை :

"ஒரு மனிதன் என்ற தலைப்பில் ஒரு பெரிய கதையை என்னுள் நான் காதலித்துக் கொண்டிருந்தேன். அந்தக் கதையின் ஆரம்பமும் முடிவும், இடையில் நடப்பனவும் மிகத் தெளிவாக என்னுள் அடிக்கடி முகிழ்த்து சரம்சரமாய்ப் பெருகும் இந்தப் புவனம் முழுவதும் மலர்க்காடாய்த் தெரியும். ஒவ்வொரு இதழும் மிகத் தெளிவாகத் தென்படும். பிறகு எல்லாம் கனவுகள் போல் மறந்து போகும். கண்ட கனவை நினைவுகூர்வதற்காகக் கண்களை மூட மறுபடியும் ஓர் அற்புதக் கனவு தொடரும். இப்படி ஓர் தன்னிலை மயக்கமாக, சுயானுபூதியாக இந்தக் கதை இன்னும் நிறைய என்னோடு இருக்கிறது.''[21] மேற்காட்டப்பெற்ற கருத்துக்களின் மூலம், 'ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்' நாவலில் கதை நிகழ்ச்சிகள் முதன்மை பெறாததையும் பொதுவான மனிதப் பண்புகளை உயர்ந்த நோக்கில் காண்பதே நோக்கமாக இருப்பதையும் நாவலைப் பற்றிய கனவு நிலையிலான தன்னனுபவம் முதன்மை பெற்றிருப்பதையும் உணர முடியும்.

கதையமைப்பில் வரன்முறை இன்மை :

இந்நாவலின் கதையமைப்பு இன்னதென வரையறுக்கப்பட்ட தெளிவான சிந்தனை நாவலாசிரியருக்கு இருந்திருக்கவியலாது என்பதையும் பின்வரும் கூற்றால் உணரலாம். ''இந்த நாவலின் முதல் வரியை எழுதிய பிறகு அடுத்த வரியும், முதல் அத்தியாயத்தை எழுதிய பிறகு அடுத்த அத்தியாயமுமாய் இதன் திசை எனக்குத் தெளிவுபட ஆரம்பித்தது.''22

கதை மாந்தர் பண்பு நலன்களுக்கு முதன்மை தருதல், கதைக் கருத்துநிலைச் சார்பு (செயல்திறன்மை), கதையைப் பற்றி நாவலாசிரியருக்கிருந்த கனவுநிலைத் தன்னனுபவம், கதையைப் பற்றிய முன்திட்டமின்மை ஆகிய காரணங்களால் மிகவும் நெகிழ்நிலையிலமைந்த கட்டமைப்பு இந்நாவலில் காணப்படுகிறது.

வடிவமற்ற வடிவம் :

கதை மாந்தர்களின் செயல்கள், கதை நிகழ்ச்சிகள் ஆகியவை முதன்மையான இடம்பெறுகின்ற நாவல்களில் ஒரு வகையான விறுவிறுப்பும் மிகவும் செம்மையான கட்டமைப்பும் அமைந்திருப்பது இயல்பு. இன்று சாகசக் கதைகள், துப்பறியும் கதைகள் எழுதுகின்ற சுஜாதா, ராஜேஷ்குமார், ராஜேந்திரகுமார் போன்ற பலரது நாவல்களிலும் மிகவும் செம்மையான கட்டமைப்பு இருப்பதை உணர முடியும் ஆயின் இவற்றில் படைக்கப்படும் கதை மாந்தர்கள் எந்த அடிப்படையிலும் தனித்தன்மை வாய்ந்தவர்களல்லர்; வாசகன் மனத்தில் இடம்பெறும் ஆற்றலுடையவர்களும் அல்லர்; ஒரு நாவலில் இடம் பெறும் கதைமாந்தர்கள் மீண்டும் மீண்டும் பல நாவல்களில் தொடர்ச்சியாக இடம் பெறுவதால் இவர்களது பெயர்களை நினைவுகூர இயலுமே தவிர, மனத்தில் தங்க வைத்துக் கொள்ள இயலுவதில்லை. சுஜாதாவின் படைப்புக்களில் வரும் கணேஷ், வசந்த் கதை மாந்தர்கள் இந்நிலையிலான தட்டைப்பாத்திரங்கள்.

கதை மாந்தர்களின் பண்பு விளக்கங்களுக்கு இன்றியமை-யாமை தரப்படுகின்ற நாவல்களில் இயல்பாகவே அமைப்பு செம்மையாகவே இராது. ஏனெனில் 'அமைப்பு என்பது கதை நிகழ்ச்சிகளின் வைப்பு முறையில் காணப்படும் ஒழுங்கமைவு' என்பதை முன்னர்க் கண்டோம். கதை நிகழ்ச்சிகளைப் பற்றிய தெளிவான திட்டம் ஏதுமின்றி, கதைமாந்தர் பண்பு நலன் சித்திரிப்பு முதன்மை இடம் பெறுகின்றபோது நிகழ்ச்சிகளுடன் தொடர்புடைய கட்டமைப்பு எவ்வாறு செம்மையாக அமைய முடியும்? வடிவச் செம்மை குன்றியிருப்பினும் (Formless form) பாத்திர வார்ப்பு முறையில் சிறந்து, படைப்பின் நோக்கம் நிறைவெய்துகின்றபோது அதனை ஒரு சிறந்த படைப்பாகத் தானே கொள்ள முடியும்!

இரண்டு தலைமுறைகளின் கதை :

'ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்' நாவல் உயர்வான மனிதப்பண்புகள், கிராமப்புறத்தின் எளிய வாழ்க்கை ஆகிய-வற்றைச் சித்திரிப்பதையே நோக்கமாகக் கொண்டிருப்பதால், அதற்கேற்ற வண்ணம் மிக நெகிழ்ச்சியுடைய கட்டமைப்பினைக் கொண்டு திகழ்கிறது. 'ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்' நாவலில் நெகிழ்ந்த கட்டமைப்பு இருப்பதற்குப் பிறிதொரு காரணமும் கூறலாம். இந்நாவலின் கதை நிகழ்ச்சிகள் இரண்டு தலைமுறைகளைச் சேர்ந்த மனிதர்களுடன் தொடர்புடையன; சபாபதிப்பிள்ளை, துரைக்கண்ணு, வேலுக்கிராமணி, மணியக்காரக் கவுண்டர் போன்றோர் பழைய தலைமுறையினர், ஹென்றி, தேவராஜன், நடராஜ ஐயர் போன்றோர் புதிய தலைமுறையினர். இந்த இரண்டு தலைமுறையினரைப் பற்றிய செய்திகள் இரண்டு மாதம் என்ற கால எல்லைக்குள் சொல்லப்படவேண்டும். எனவே நீட்டல் கால அமைப்பு (Linear temporal form) தொகுப்புக் கால அமைப்பு (Fugal temporal form) என்ற இரண்டில் இரண்டா-வதாகக் கூறப்படும் தொகுப்புக் கால அமைப்பு இந்நாவலில் பின்பற்றப்பட்டிருக்கிறது. மிகுதியான பலதரப்பட்ட செய்திகளைச் சுருங்கிய கால எல்லைக்குள் வைத்துக் கூறும் போது ஒழுங்கமை-

வாகக் கூற இயலாது; தேவையான செய்திகளை உரிய இடத்தில் போகின்ற போக்கில் கூறுவதன் மூலம் செய்திகளின் கால வரிசை சிதைவது இயல்பான செயலாகும். இந்த அடிப்படையில் நாவலின் தலைமை மாந்தரல்லாத பிற கதைமாந்தர்களைப்பற்றிய செய்திகள் உரிய இடங்களில்சுருக்கமாகக் கூறப்படுவதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தேவராஜன், அக்கம்மா, மணியக்காரக் கவுண்டர், போன்றோரின் வரலாறுகளும், துரைக்கண்ணுவின் குடும்ப நிகழ்ச்சிகளும் இந்நாவலின் மையக் கதையுடன் தொடர்புடைய வகையில் கிளைக்கதைகளாக இடம் பெறுகின்றன.

மிக நுட்பமான வருணனைகள், ஊர் மக்களின் வாழ்க்கை முறைகளை விளக்கும் சிறுசிறு நிகழ்ச்சிகள் ஆகியவை இடம் பெறுவதன் மூலம் நாவலில் நடப்பியல் பண்பு ஒளி வீசி மிளிர்கிறது.

முடிவுரை.

நாவலின் அடிப்படை நோக்கான 'மனிதப்பண்புகளின் மேன்மை' நாவல் முழுவதிலும் ஊடாடி நிற்கிறது. இதற்கேற்றவாறு நிகழ்ச்சிகளின் முதன்மை குன்றி, பண்பு விளக்கம் சிறககிறது. நெகிழ்ந்த கட்டமைப்புடன் பல்வேறு உத்திகளும் இணைந்து நிறைவான வடிவம் பெற்றதாக 'ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்' நாவல் நிகழ்கின்றது.

— டாக்டர். ம. திருமலை

'வரகுண பாண்டியன் பள்ளிப்படை'

திருச்சிக்குத் தெற்கில் 17 கி.மீ. தொலைவில் உள்ள அழிந்தியூர் என்னும் தொன்மையான ஊரில் ஆய்வாளர் டாக்டர். இரா. கலைக்கோவன் அவர்கள் சிதைந்த பழைய சிவாலயம் ஒன்றைக் கண்டுபிடித்தார். சில நூற்றாண்டுகட்கு முன்பே வழிபாடு நின்றுவிட்ட கோயில். அவருடன் சென்ற தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் கல்வெட்டுத் துறையினர் அக்கோயில் கல்வெட்டுக்களைப் படி எடுத்து ஆய்வு செய்தனர். அவை இதுவரை படி எடுக்கப்பெறாத புதிய கல்வெட்டுக்கள் ஆகும்.

கல்வெட்டுக்கள் மூலம் அக்கோயிலின்பெயர் வரகுண ஈச்சுரம் என்பது தெரிந்தது. பாண்டியநாட்டு எல்லைக்கு அப்பால் சோழநாட்டுப் பகுதியில் வரகுண பாண்டியன் பெயரோடு ஒரு சிவாலயம் இருப்பது சிறப்பான செய்தியாகும்.

வரகுணன் என்ற பெயரில் இருபாண்டிய மன்னர்கள் இருந்துள்ளனர். கி.பி. 768 முதல் 815 வரை ஆட்சிபுரிந்தவன் முதல் வரகுணன். கி.பி. 862 முதல் 880 வரை ஆட்சிபுரிந்தவன் இரண்டாம் வரகுண பாண்டியன்.

முதல் வரகுணன் வைணவ சமயம் சார்ந்தவன். 'பரம வைஷ்ணவன் தானாகி நின்றியங்கு மணிநீள்முடி மன்னவன்' என்று அவன் புகழப்பெறுவான். கொங்கு நாட்டுப் பேரூரில் 'திருமாலுக்கு அமர்ந்துறையைக் குன்றமன்னதோர் கோயிலை' உருவாககியவன். அவன் பெயரில் பாண்டியநாட்டில் விசய நாராயணச் சதுர்வேதி மங்கலத்தில் வரகுண விண்ணகர் என்ற திருமால் கோட்டம் இருந்தது. எனவே வைணவ சமயம் சார்ந்த முதல் வரகுணன் பெயரில் மேற்கண்ட அழிந்தியூர் வரகுண ஈச்சுரம் இருத்தல் இயலாது.

இரண்டாம் வரகுண பாண்டியன் சிறந்த சிவபக்தன், சிவபெருமானை உள்ளத்தில் இருத்தியவன் என்று இவனைச் செப்பேடு புகழும்.

'கொற்றவன் எம்கோ வரகுணன்
பிள்ளைப் பிறை சடைக்கணிந்த
பினாகபாணி எம்பெருமானை உள்ளத்தில் இனிதிருவி'

என்று தளவாய்புரச் செப்பேடு கூறும்.

பட்டினத்தார் இவ்வரகுணன் செய்த சிவபக்திச் செயல்களைக் கூறிப்

'பெரிய அன்பின் வரகுண தேவர்'

என்று பாடுகின்றார்.

மாணிக்கவாசகர் தம் திருச்சிற்றம்பலக் கோவையாரில்

'வரகுணனாம் தென்னவன் ஏத்து சிற்றம்பலத்தான்'

என்று சிறப்பித்துள்ளார்.

நம்பியாண்டார் நம்பிகள்

'வரகுணன் தன் முடியே தருகழல் அம்பலத் தாடிதன்
மொய்கழலே'

என்று புகழ்ந்துள்ளார்.

இவ்வரகுணன் திருச்செந்தூர் முருகப்பெருமானிடம் எல்லையில்லாத அன்பு கொண்டு பல கொடைகள் அளித்துள்ளான்.

பாண்டியர் வரலாற்றில் காணும் இரண்டு வரகுண பாண்டியர்கள் கல்வெட்டுக்களும் சோழநாட்டுப் பகுதியில் கிடைப்பினும் மேற்கண்ட அழிந்தியூர் வரகுண ஈச்சரம் இரண்டாம் வரகுணனோடு தொடர்புடையதே என்பதை மேற்கண்ட சான்றுகளால் அறியலாம்.

சிறந்த சிவநெறியாளனாகத் திகழ்ந்து, சைவ அடியார்கள் பலராலும் போற்றப்பெற்ற வரகுண பாண்டியன் 'வரகுண ஈச்சரன்' என்று புகழப் பெற்றிருக்கவேண்டும் என்று ஊகிக்கத்தக்க வகை-

யில் பழம் பாடல் ஒன்று கிடைத்துள்ளது. (இராவணனை இராவணேசுவரன் என்று அழைப்பது நோக்கத் தக்கது)

இவ்வரகுணன் பெயரால் வளநாடும், ஊரும், கோயிலும் பாண்டிய நாட்டில் இருந்தன.

மேற்கண்ட வரகுண ஈச்சுரம் அமைந்துள்ள அழிந்தியூருக்கு 'வரகுணப் பெருமாள் நல்லூர்' என்று பெயர் வழங்கப் பெற்ற-தாகக் கல்வெட்டு மூலம் அறிகின்றோம்.

அழிந்தியூர் வரகுண ஈச்சுரம் திருவானைக் காவோடு நெருங்கிய தொடர்புடையது. அங்கு 'பிச்சியார் மடம்' என்ற பெயரில் சைவ சமயம் சார்ந்த பெண் அடியார்கள் தங்கிய மடம் ஒன்று இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கோயில் இறைவன் 'வரகுண ஈஸ்வரமுடைய மகாதேவர்' என்று அழைக்கப் பெற்றாலும், ஒரு கல்வெட்டில் வரகுண ஈஸ்வர-முடைய அவ்விறைவர் 'நாயனார் மன்னர்' என்று குறிக்கப் பெற்றுள்ளமை அவ்விறைவன் யாரோ மன்னர் பெயர் பெற்றிருந்-தமை புலப்படும்.

கோயில் வரகுண ஈச்சுரம் என்றும், கோயில் இறைவன் வரகுண ஈஸ்வரமுடைய மகாதேவர் என்றும் அழைக்கப் பெறு-வதால் 'நாயனார் மன்னர்' இரண்டாம் வரகுண பாண்டியனாகவே இருத்தல் வேண்டும்.

எனவே மிகப்பெரிய சிவபக்தனாகவும், வெற்றி வீரனாகவும், கொடையாளனாகவும், விளங்கிய இரண்டாம் வரகுண பாண்டிய-னின் 'பள்ளிப்படை' கிடைத்திருப்பது பாண்டியர் வரலாற்றில் சிறப்புமிக்க செய்தியாகும்.

— புலவர் செ. இராசு

1.0. அகராதி

ஒரு மொழியிலுள்ள சொற்கள் அகர வரிசையில் அடுக்கப்பெற்றுப் பொருள் கூறப்பெற்றிருப்பது அகராதி (dictionary) எனப்படும். 'அ' என்னும் எழுத்தை முதலாகக் கொண்டு தொடங்கிச் செல்வதால் இது அகராதி எனப்பட்டது. 'அ' என்னும் ஒலியனும் (phoneme), 'கரம் என்னும் சாரியையும் (inflectional increment) 'ஆதி' என்னும் வடமொழிச் சொல்லும் இணைந்து அகராதி என்னும் வடிவம் கிடைக்கப்பெற்றுள்ளது. அகராதி என்னும் சொல் முழுமையான பொருளை உணர்த்தவில்லை. எனினும் தமிழில் இச்சொல்லே அகராதியினைக் குறிக்கும் நிலை பெற்றுவிட்டது.

தமிழில் அகராதியினைக் குறிக்க அகர வரிசை, அகர முதலி, உரிச்சொல் பனுவல், நிகண்டு போன்றனவும், வடமொழியில் அபிதானம், கோசம், நாமமாலை, நிகண்டு போன்றனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆங்கிலத்தில் சுமார் பதினாறுக்கும் மேற்பட்ட சொல் வடிவங்கள் பயன்படுத்தப் பெற்று, அதன் பின்னரே dictionary என்னும் வடிவம் நிலை பெற்றது.

1.1.0. அகராதியியல்

அறிவியல் நெறியில் அகராதி அமைக்கும் கலையே அகராதியியல் (lexicography) எனப்படும். இந்திய மொழிகளுக்கு அகராதியியலில் முன்பிருந்தே சிறப்பிடம் உண்டு. முதன் முதலில் சொற்பொருள் கூறும் துறை சார்ந்த நூல் இலத்தீன் மொழியில் தோன்றியிருப்பினும் இந்திய மொழிகள் பலவற்றில் பல கால கட்டங்களில் பலவகை அகராதிகள் தோன்றியுள்ளன.

1.2.0. அகராதியியலும் அகராதிக்கலையும்

அகராதி எவ்வாறு அமைய வேண்டும் என்னும் கோட்பாடுகளை அகராதிக்கலை (lexicology) சுட்டி நிற்கும். இக்கோட்பாடுகளின் அடிப்படையில் அகராதி அமைத்தல் அகராதியியலாகும். அகராதிக்கலை பெரும்பாலும் அனைத்து மொழி-

களுக்கும் பொருந்தும் வகையில் கோட்பாடுகளை விளக்கி நிற்க, அகராதியியல் ஒரு குறிப்பிட்ட மொழிக்கு மட்டுமே பொருந்தும் வகையில் அமையும்.

1.3.0. அகராதியியலும் மொழியியலும்

பயன்பாட்டு மொழியியலின் (applied linguistics) ஒரு பிரிவாகிய அகராதியியல் தனியொரு துறையாக வளர்ச்சி பெற்றிருப்பினும், இது பல நிலைகளில் மொழியியலோடு மிக நெருங்கிய தொடர்புடையதாகும்.

சொல்லின் ஒலியன் நிலை, உருபன் நிலை ஆகியவற்றை விவரிக்கும் வகையில் விளக்க மொழியியலோடும் (descriptive linguistics), வரலாற்று அடிப்படையில் சொற்பொருள் விளக்கம் தரும் நிலையில் வரலாற்று மொழியியலோடும் (historical linguistics), சொற்கள் வருகையினைச் சுட்டும் நிலையில் புள்ளி விவர மொழியியலோடும் (statistical linguistics), மனித மன உணர்வுகளுக்கேற்ப, பொருள் நிலையில் காணப்பெறும் வேறுபாட்டினை உணர்த்தும் வகையில் உள மொழியியலோடும் (physcholinguistics), சமுதாய நிலை காரணமாகச் சொல்வடிவங்களின் வேறுபாடுகளை விவரிக்கும் வகையில் சமுதாய மொழியியலோடும் (sociolinguistics), நடை வேறுபாட்டினை விவரிக்கும் வகையில் நடையியலோடும் (stylistics) இலக்கிய வடிவமில்லா மொழிகளுக்கு அகராதி தயாரிக்கும் நிலையில் கள ஆய்வு மேற்கொள்ளும் வகையில் கள மொழியிடலோடும் (field linguistics), கிளை மொழியியலோடும் (dialectology) இருமொழி அகராதி தயாரிக்கும் நிலையில் முரண் மொழியியலோடும் (contrastive linguistics) அகராதியியல் தொடர்பு கொண்டுள்ளது.

பல மொழியியல் துறைகளோடு தொடர்பு கொண்டிருப்பினும் நடைமுறைக்கு ஏற்ற வகையில் அகராதியியல் தனது கோட்பாடுகளை அமைத்துக்கொள்ளும்.

2.0 அகராதியின் கட்டமைப்பு

பெரும்பாலும் அகராதிகள் மூன்று பகுதிகளை உடையன-வாக அமையப்பெறும். முன்னுரை (introduction and preface), வாசகர் வழிகாட்டி (readers guide) ஆகியன முதல் பகுதியாகவும், சொற்களஞ்சியம் இரண்டாவது பகுதியாகவும், பின்னிணைப்பு (appendix) மூன்றாவது பகுதியாகவும் இடம்பெறும். மூன்றாவது பகுதி எல்லா அகராதிகளிலும் இடம்பெறுவதில்லை.

முன்னுரைப் பகுதியில் அகராதியின் தலைப்பு (title), குறிக்-கோள் (purpose), தரவு (source material), அகராதி ஆக்கத்-தின் முறை ஆகியவை பற்றிய விளக்கம் அமையப்பெறும். வாச-கர் வழிகாட்டி என்னும் பகுதியில் சொற்களின் தன்மை, அவற்-றின் மாற்று வடிவங்கள், அவை சொல்லப்பட்டுள்ள பான்மை, சொற்களின் ஒலிப்பு முறைமை, சுருக்கக் குறியீடுகள், பயன்-படுத்தப்பெறும் மொழிகள் போன்றவை பற்றிய செய்திகள் இடம் பெறும்.

சொற்களஞ்சியப் பகுதியில் சொற்கள் முறையே அடுக்கப் பெற்றுப் பொருள் கூறப்பெற்றிருக்கும். ஒவ்வொரு சொல்லுக்கும் தலைமைச் சொல் (head word), வரி வடிவம் (spelling), ஒலிப்பு முறை (pronunciation), இலக்கணச் செய்திகள் (grammatical infor-mation), பொருள் (meaning), சான்றாதாரங்கள் (illustrative examples), சொல்லாக்கம் (derivation), குறிப்புப்பொருள் தொடர் (phrase), மரபுத்தொடர் (idiom), சொற்பிறப்பு வரலாறு (etymology) ஒரு பொருள் பலசொல் (synonym), எதிர்பதச் சொல் (antonym), குறுக்க விளக்கம் (cross reference) போன்ற செய்திகள் இடம்பெறும்.

அகராதி பற்றிய பிற செய்திகள் அனைத்தும் பின்னிணைப்-பில் இடம் பெறும்.

3 0. அகராதி வகைகள்

3. 1. 0. அகராதிகளை அவை சொற்களுக்குப் பொருள் கூறும் நிலையினை அடிப்படையாகக் கொண்டு வரலாற்று அகராதி

(historical dictionary) எனவும், விளக்க அகராதி (descriptive dictionary) எனவும் வகைப்படுத்தலாம்.

வரலாற்று அகராதி வெவ்வேறு காலகட்டத்தில் சொற்பொருள் அடைந்த மாற்றங்களை விவரிக்கும். வரலாற்று அகராதியின் ஒரு வகையாகிய சொற்பிறப்பு வரலாற்று அகராதி (etymological dictionary) சொல் வரலாற்றினை விளக்கும் வகையில் அமையும்; ஈண்டுச் சொற்பொருளுக்கு முதலிடம் கிடையாது. அகராதி அமைக்கப்பெறும் காலத்தில் காணப்பெறும் சொற்பொருளை மட்டுமே விளக்க அகராதி விவரிக்கும்.

3.2.0. சொற்களுக்குத் தரப்பெறும் விளக்கங்களில் அடிப்படையில் அகராதிகளை மொழியியல் அகராதி (linguistic dictionary) எனவும், பல்பொருள் விளக்க அகராதி (encyclopaedic dictionary) எனவும் பகுக்கலாம். மொழியியல் அகராதிகளில் சொற்களின் ஒலிப்பு முறை, பொருள், சொற்பிறப்பு வரலாறு, இலக்கணச் செய்திகள் போன்ற மொழிதொடர்பான செய்திகள் இடம்பெற, பல்பொருள் விளக்க அகராதிகளில் மொழியியல் அகராதி குறிப்பிடும் செய்திகளுக்கு அப்பால் சொல் தொடர்பான மொழியியல் அல்லாத செய்திகளும் இடம்பெறும்.

3.3.0. அகராதிகளைச் சொற்களின் வகைமை அடிப்படையிலும், பயன்பெறும் மொழிகளின் எண்ணிக்கை அடிப்படையிலும் சொற்களின் தன்மை அடிப்படையிலும், சொற்பொருள் கூறப்பெறும் பான்மையிலும், சொற்களின் நிரலமைப்பு முறையிலும், பயனடிப் படையிலும், வாசகர் கண்ணோட்டத்தின் அடிப்படையிலும் வகைப்படுத்துதல் இயலும்.

3.3.1. சொல்லின் வகைமை அடிப்படையில் அகராதிகளை வட்டார வழக்குச் சொல் அகராதி (dictionary of regional dialects) கொச்சை மொழி அகராதி (dictionary of slangs), குழுமொழி

அகராதி (dictionary of argots), இலக்கியச்சொல் அகராதி (dictionary of literary words) என வகைப்படுத்த முடியும்.

3.3.2. அகராதிகளில் பயன்படுத்தப்பெறும் மொழிகளின் அடிப்படையில் ஒருமொழி அகராதி (monolingual dictionary), இருமொழி அகராதி (bilingual dictionary), பலமொழி அகராதி (multilingual dictionary) என அகராதிகளைப் பாகுபடுத்தலாம்.

3.3.3. அகராதியில் இடம்பெறும் சொற்களுக்குக் கூறப்பெறும் பொருள், இலக்கணக் குறிப்பு, சொல்வகை போன்ற செய்திகளில் எவ்வளவு செய்திகள் இடம்பெறுகின்றன என்பதன் அடிப்படையிலும் அகராதிகளை வகைப்படுத்த முடியும்.

3.3.4. சொற்பொருள் கூறப்பெறும் பான்மையினை அடிப்படையாகக் கொண்டு அகராதிகளை வரலாற்று அகராதி எனவும், விளக்க அகராதி எனவும் பாகுபடுத்தலாம்.

3.3.5. சொற்களை நிரல்படுத்தும் முறையினை அடியொற்றி அகராதிகளை அகரவரிசை முறையில் அமையப்பெற்ற அகரநிரல் அகராதி (alphabetical dictionary) எனவும், பொருளடிப்படையில் சொற்கள் நிரல்படுத்தப் பெற்ற பொருண்மை நிரல் அகராதி (semantic dictionary) எனவும் பகுக்கவியலும்.

3.3.6. குறிக்கோள் அல்லது நோக்கத்தின் அடிப்படையில் அகராதிகளைக் கல்வி சார்ந்த அகராதி (academic dictionary) எனவும், விரிவாக்க அகராதி (explanatory dictionary) எனவும் பகுத்துக் காணுதல் இயலும். விரிவாக்க அகராதிகளில் வழக்குச் சொற்கள், வாய்மொழி இலக்கியச் சொற்கள், நடை வேறுபாட்டுச் சொற்கள் ஆகியன இடம்பெற்று, இவை முழுமையுடையனவாக அமையும். கல்வி சார்ந்த அகராதிகளில் பெரும்பாலும் இலக்கிய வழக்குச்

சொற்கள், செய்தித்தாள்மொழிச் சொற்கள், வழக்கிறந்த சொற்கள் போன்றவை மட்டுமே காணப்பெறும்.

3.3.7. வாசகர் அடிப்படையிலும், எத்தனை அல்லது எத்தகு மக்களுக்குப் பயன்பெறும் என்பதனை அடியொற்றியும் அகராதிகளை வகைப்படுத்த இயலும்.

3.4.0. அகராதிகளை அவற்றின் பயன்பாடு கருதி பயிற்சிக்குரிய அகராதி (practical dictionary) எனவும், கோட்பாட்டு அகராதி (theoritical dictionary) எனவும் பகுக்கலாம்.

3.5.0. சொற்களும் அவை உணர்த்தும் பொருளுக்குமிடையேயுள்ள உறவு அடிப்படையில் அகராதிகளை வெளிப்படை நிலைப்பொருள் அகராதி (dictionary of words of explicit meaning), குறிப்பு நிலைப்பொருள் அகராதி (dictionary of words of implicit meaning) என இருவகைப்படுத்தலாம்.

இன்னமும் அகராதிகளைப் பொருண்மை நிலையிலும் (semantic level), தொடரியல் நிலையிலும் (syntactic level), இலக்கண நிலையிலும் (grammatical level) வகைசெய்தல் இயலும்.

3.6.0. அகராதியில் இடம்பெறும் சொற்களின் அடிப்படையில் பொது அகராதிகள் (general dictionaries) எனவும் சிறப்பு அகாரதிகள் (special dictionaries) எனவும், விளக்க அகராதிகள் இருவகைப்படும்.

3.6.1. பொது அகராதிகள் ஒரு மொழியின்கண் காணப்பெறும் அனைத்துச் சொற்களையும் உள்ளடக்கியிருக்கும். பொது அகராதிகள் கல்வி சார்ந்த அகராதி, விரிவாக்க அகராதி என இருவகைப்படும்.

கல்வி சார்ந்த அகராதிகளில் செம்மை வழக்குச்சொற்கள், படைப்பிலக்கியங்கள், அறிவியல், கலை சார்ந்த சொற்கள் மட்டுமே இடம்பெறும். இவை தவிர வழக்கிறந்த சொற்களும், அருகிய சொற்களும் இடம்பெறுவதுண்டு; வட்டார வழக்குச் சொற்கள் எந்திறத்தானும் இடம் பெறுவதில்லை. விரிவாக்க அகராதிகளில் இலக்கியச் சொற்கள், வாய்மொழி இலக்கியச் சொற்கள், வட்டார வழக்குச் சொற்கள், நடை வேறுபாட்டுச் சொற்கள் போன்றவை இடம் பெறும். இவ்வகராதிகள் சொற்கள் பற்றிய செய்தியை விரிவாகவும் முழுமையாகவும் தரவல்லன.

3.6.2. சிறப்பு அகராதிகளை அவை உள்ளடக்கும் சொற்களின் தன்மை அடிப்படையிலும், அமைப்பு அடிப்படையிலும், பொருளடிப் படையிலும், பயனடிப்படையிலும் பகுத்துக்காண்டல் இயலும்.

3.6.2.1. சிறப்பு அகராதிகளை அவை உள்ளடக்கும் சொற்களின் தன்மை அடிப்படையில் வட்டார வழக்குச்சொல் அகராதி, கலைச்சொல் அகராதி (dictionary of technical terms). தொழில் துறை அகராதி (occupational dictionary), கொச்சை மொழி அகராதி, குழுமொழி அகராதி, விளங்காமொழி அகராதி (dictionary of Jargons) என வகைப்படுத்தலாம்.

வட்டார வழக்குச்சொல் அகராதிகளுக்குப் பொது அகராதிக்குரிய பண்புகளும் உண்டு. இவண் வட்டாரச் சொற்கள் மட்டுமே இடம்பெறும் இவ்வகராதிகளைக் கிளைமொழி அளவை (dialect survey) நிகழ்த்தப்பெற்ற பின்னரே தயாரித்தல் இயலும். இவை தலைமைச்சொல் வழங்குமிடம், தலைமைச் சொற்களின் வேறுபட்ட வடிவங்கள் போன்றவற்றைச் சுட்டும்.

கலைச்சொல் அகராதிகள் பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட துறைக்குரிய கலைச்சொற்களைக் கொண்டு விளங்கும். ஆட்சியியல், மானிடவியல், பொறியியல், தாவரவியல், கணிதவியல், புள்ளியியல், பொருளாதாரவியல், வேதியல், விலங்கியல், சட்டவியல், உளவியல், வரலாறு, வணிகவியல், இயற்பியல், புவியியல் போன்ற துறைகளுக்கு ஆங்கிலக் கலைச்சொற்களுக்கு ஒத்த

தமிழ்ச்சொற்களைக் கொண்ட அகராதிகள் பல தமிழில் தோற்றம் பெற்றுள்ளன.

தொழில்துறை அகராதிகள் தச்சுவேலை, மீன்பிடித்தல், விவசாயம், துணி நெய்தல் போன்ற பல்வேறு வகையான தொழிலில் காணப்பெறும் சொற்களை உள்ளடக்கியிருக்கும்.

மொழியில் காணப்பெறும் கொச்சையான சொற்களைக் கொண்டமையப்பெறும் அகராதி கொச்சைமொழி அகராதி எனவும், ஒரு குறிப்பிட்ட இனத்தவர் மட்டுமே பயன்படுத்தும் சொற்களைக் கொண்டமையப்பெறும் அகராதி குழுமொழி அகராதி எனவும், மொழியின்கண் காணப்பெறும் புரிந்து கொள்ள இயலாச் சொற்களைக் கொண்டமையப்பெறும் அகராதி விளங்காமொழி அகராதி எனவும் அழைக்கப் பெறும்.

3. 6. 2. 2. சிறப்பு அகராதிகளை அவற்றின் அமைப்பு அடிப்படையில் வரிவடிவ அகராதி (orthographic dictionary), ஒலிப்பு முறை அகராதி (dictionary of pronunciation), சொல்வாக்க அகராதி (derivational dictionary), பலபொருள் ஒரு சொல் அகராதி (dictionary of homonyms), சிலேடைச் சொல் அகராதி (dictionary of paronyms) இலக்கண அகராதி (grammatical dictionary), இறுதி நிலை அகரநிரல் அகராதி (reverse dictionary) சுருக்கெழுத்து அகராதி (dictionary of abbreviations and acronyms) எனப் பாகுப்படுத்த இயலும்.

வரிவடிவ அகராதி சொற்களில் காணப்பெறும் எழுத்துக்கள், ஒலியழுத்தம் (stress), இசைமை (tone), சொல் எழுதப்பெற வேண்டிய முறைமை ஆகியனவற்றை விளக்கமாகச் சுட்டும் வகையில் அமையும். ஒலிப்புமுறை அகராதி சொற்கள் ஒலிக்கப்பெற வேண்டிய முறையினைக் குறிக்கும் வகையில் அமையும்.

சொல்லாக்க அகராதியில் அடிச் சொற்களோடு (stems) எவ்வாறு முன்னொட்டுக்கள் (prefixes) அன்றிப் பின்னொட்டுக்கள் (suffixes) இணைந்த சொற்கள் ஆக்கம் பெற்றுள்ளன என்பது சுட்டப்பெற்றிருக்கும். வேர்ச்சொல் அகராதி (dictionary of roots) வினைச்சொல் அகராதி (dictionary of verbs) போன்றன இவ்வகை அகராதியினைச் சார்ந்தவை ஆகும்.

பல பொருள் ஒரு சொல் அகராதியில் பல பொருள் ஒரு சொற்கள் தொகுக்கப்பெற்று அவற்றின் வெவ்வேறு பொருட்கள் முறைப்படிச் சுட்டப்பெற்றிருக்கும். சிலேடை அகராதி சிலேடைச் சொற்களையும் அவற்றின் வெவ்வேறு பயன்பாட்டினையும் குறித்து நிற்கும்.

இலக்கண அகராதியில் ஒரு மொழியின் இலக்கணத் திட்டத்தினைப் (grammatical system) புரிந்துகொள்ளத் துணைசெய்யும் வகையில் சொற்களின் இலக்கணக் கூறுகள் (grammatical categories) பெயர்த்திரிபு (declension) போன்றவை விரிவாகக் குறிக்கப் பெற்றிருக்கும். இவ்வகராதிகள் மொழி பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்குப் பெரிதும் பயன்படும்.

இறுதி நிலை அகரநிரல் அகராதியில் சொல்லின் இறுதி நிலையிலிருந்து அகரநிரல் பின்பற்றப்பட்டுச் சொற்கள் அமைக்கப் பெற்றிருக்கும். இவ்வகராதியில் ஒரே அமைப்பினைக் கொண்ட விகுதிகளுடைய சொற்களை எளிதில் காண்டு கொள்ளலாம். சுருக்கெழுத்து அகராதி சுருக்கக் குறியீடுகளுக்கு முழுமை வடிவங்களைச் சுட்டும் வகையில் அமையப்பெற்றிருக்கும்.

3. 6. 2. 3. சிறப்பு அகராதிகளைப் பொருளடிப்படையில் ஒரே பொருளைச் சுட்டப் பயன்பெறும் சொற்களைத் தொகுத்துத் தரும் ஒரே பொருள் பல சொல் அகராதி (dictionary of synonyms,

என்வும், எதிர்ப்பதச் சொல்லைத் தொகுத்துத் தரும் எதிர்ப்பதச்-சொல் அகராதி (dictionary of antonyms) என்வும், பொருள் தொடர்புடைய சொற்களைக் கோவைப்படுத்திக் கூறும் ஒழுங்கு முறை அகராதி (systemic dictionary) எனவும், சொற்பொருள் வருகையின் எண்ணிக்கை அடிப்படையில் சொற்கள் அமையப் பெறும் சொல் வருகை எண்ணிக்கை அகராதி (dictionary of frequency counts) எனவும் வகைப்படுத்துதல் இயலும்.

3. 6. 2. 4. சிறப்பு அகராதிகளை இன்னமும் சொற்களின் செயல்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு வருகை வழக்கு அகராதி (dictionary of collocations) எனவும், செம்மை வழக்கு அகராதி (dictionary of usages) எனவும், நிகழ்வழக்குச் சொல் அகராதி (dictionaiy of current and common words) எனவும், சிறப்புச் சொல் அகராதி (dictionary of special lexical units) எனவும், குறிப்புப்பொருள் தொடர் அகராதி (dictionary of phrases) எனவும், பழமொழி அகராதி (dictionary of proverbs) எனவும், மரபுத் தொடர் அகராதி (dictionary of idioms) எனவும் புது வழக்கு அகராதி (dictionary of neologism) எனவும் கடன் சொல் அகராதி (dictionary of borrowed words) எனவும் பாகு படுத்தலாம்.

வருகை வழக்கு அகராதி பெயர் (noun), வினை (verb), பெயரடை (adjective) போன்ற சொல்வகைகளைத் தொகுத்துத் தரும் வகையில் அமையும். இவை மொழி கற்பிக்கும் ஆசிரியர் களுக்குப் பயனுடையனவாக அமையும். செம்மை வழக்கு அகராதி சொற்களின் முறையான நிகழ்காலப் பயன்பாட்டினைச் சுட்டும் வகையில் அமையும். நிகழ்வழக்குச் சொல் அகராதி அன்றாட வாழ்வில் பயன்படுத்தப் பெறும் சொற்களை தொகுத்துத் தரும்.

குறிப்பிட்ட வகைச் சொற்களை மட்டுமே விளக்கும் வகையில் அமையப் பெறும் அகராதிகள் சிறப்புச் சொல் அகராதிகள் எனப் படும். ஒலிக்குறிப்புச் சொற்களைத் தொகுத்துத் தரும் ஒலிக்குறிப்பு

அகராதி சொல் (dictionary onomatopoetic words), கல்வெட்டுச் சொற்களைத் தொகுத்துத் தரும் கல்வெட்டுச்சொல் அகராதி, (dictionary of inscriptional words), புலவர்களின் பெயர்ப்பட்டியலை விவரிக்கும் புலவர் அகராதி (dictionary of poets), இடப் பெயர்களைத் தொகுத்துத் தரும் இடப்பெயர் அகராதி (dictionary of place names) இயற்பெயர்களின் தொகுதியினைச் சுட்டும் இயற்பெயர் அகராதி (dictionary of proper nouns), குடிப்பெயர்களைத் தொகுத்துத் தரும் குடிப்பெயர் அகராதி (dictionary of surnames), ஒலி நிலையில் குறைந்த வேறுபாடுடைய சொற்களை விவரிக்கும் குறை ஒலி இணைச்சொல் அகராதி (dictionary of minimal pairs), தொகை எண்களால் சுட்டப்படுவனவற்றை விளக்கும் தொகை அகராதி (dictionary of numerical group), செய்யுட்கேற்ற எதுகைத் தொடைச்சொற்கள் தரட்பெறும் தொடைஅகராதி (dictionary of concatenation of lexical units) போன்றவை சிறப்புச்சொல் அகராதியின் பாற்படும்.

ஒரு மொழியிலுள்ள குறிப்புப்பொருள் தரும் தொடர்களைக் குறிப்புப்பொருள் தொடர் அகராதியும், மொழியிலுள்ள பழமொழிகளைக் பழமொழி அகராதியும், அனைத்து மரபுச்சொற்றொடர்களையும் அவற்றின் பொருள் செயல்பாட்டினையும் மரபுச்சொற்றொடர் அகராதியும், மொழியில் புதிதாக அமையப்பெற்ற சொற்களைப் புதுவழக்கு அகராதியும், கடன்பெற்ற சொற்களைக் கடன் சொல் அகராதியும் தொகுத்துத் தரும்.

3.6.2.5. இவை நீங்கலாக ஒரு புலவரின் மொழியில் அல்லது தனியொரு இலக்கிய மொழியில் காணப்பெறும் சொற்களைத் தொகுத்துத் தரும் விளக்க நிலை அகராதி (exegetic dictionary) இன்றியமையாத சொற்களை அடி இடம் சுட்டும் சொற்கோவை அகராதி (dictionary of verbal concordance) இன்றியமையாப் பொருட்களைச் சுட்டும் பொருட்கோவை அகராதி (dictionary of real concordance), மொழி கற்போருக்குப் பயன்படும் வகையில் படவிளக்கங்களுடன் அமையும் மொழி பயில்வோர் அகராதி (learners dictionary). மொழியில் காணப்பெறும் வழக்கிறந்த

சொற்களைத் தொகுத்துத்தரும் வழக்கிறந்த சொல் அகராதி (dictionary of obsolete words), அருகிய வழக்குச் சொற்களைத் தொகுத்துத் தரும் அருகிய சொல் அகராதி (dictionary of archaic words) ஆகிய அகராதிகளும் சிறப்பு அகராதிகளாகக் கருதத்தக்கவை.

3.6.2.6 நூலின் செய்யுளிலுள்ள முதற்சொற்களை அகர வரிசையில் கொடுக்கும் செய்யுள் முதற்குறிப்பு அகராதி, அருஞ்சொற்களை மட்டும் பொருளுடன் கூறும் அருஞ்சொல் அகராதி (glossary). ஒரு கருத்து வெவ்வேறு இலக்கியங்களில் எப்படி எதிரொலிக்கின்றது என்பதனைச் சுட்டும் கருத்து வருகை அகராதி (thematic dictionary), கனவில் தோன்றும் காட்சிக்குரிய பலன்களைக்கூறும் கனவு அகராதி (dictionary of dreams), மேற்கோள்கள் பயன்படுத்தப் பெற்ற இடங்களை சுட்டிக்காட்டும் மேற்கோள் அகராதி (dictionary of quotations), அடுக்கு மொழிகளைத் தொகுத்துத்தரும் அடுக்கு மொழி அகராதி, புலவர்கள், இலக்கியங்கள் ஆகியவற்றின் காலங்களின் விளக்கக் குறிப்புக்களை அறிந்து கொள்ளத் துணைபுரியும் காலக்குறிப்பு அகராதி (dictionary of ages) ஆகியனவும் சிறப்பு அகராதிகளே.

ஈண்டுக் குறிப்பிடப் பெற்றுள்ள அகராதிப் பாகுபாட்டினுள்ளே மயக்கம் (overlapping) காணப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட பாகுபாட்டில் அமையப் பெறும் அகராதி இன்னொரு பாகுபாட்டின் கண்ணே அமையப் பெறுதலுண்டு.

4.0. தமிழ் அகராதிகள்

தமிழில் பல்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு வகையான அகராதிகள் தோன்றியுள்ளன. [1] தொல்காப்பியம் சொல்லுக்குப் பொருள்கூறும் நிலையில் ஒரு சொல், ஒரு பொருள், பல சொல், பல பொருள் ஒரு சொல் எனப் பாகுபடுத்திச் சொற்பொருள் கூறுவது அகராதியின் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளது.

தொல்காப்பியத்திற்குப் பின்னர் கலைக்கோட்டுத்தண்டு, ஆதிதிவாகரம் என்னும் இரண்டு நூற்கள் இருந்தமைக்கு நன்னூல் உரையில் காணப்பெறும் மேற்கோள் சான்றாக அமைந்துள்ளது. இதனை அடுத்து கி.பி. எட்டாம் நூற்றாண்டளவில் பன்னிரண்டு தொகுதிகளாகப் பகுத்துப்பொருள் கூறும் சேந்தன் திவாகரமும், பத்து வகைகளாகப் பகுத்துப் பொருள் கூறும் பிங்கல நிகண்டும் தோன்றின. நன்னூல் தனது நிகண்டுப் பகுதியில் பல சொற்களுக்குத் தொல்காப்பியத்தைப் போன்று பொருள் கூறுகின்றது.

கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் பன்னிரண்டு தொகுதிகளைக் கொண்ட சூடாமணி நிகண்டு தோற்றம் பெற்றது. இது மெய்யெழுத்துக்களின் அடிப்படையில் சொற்களைப் பதினெட்டு வகை எதுகைச் சொற்களாகப் பகுத்துப் பொருள் கூறுகின்றது. இதனை அடுத்துத் தோன்றிய பத்துத் தொகுதிகளைக் கொண்ட அகராதி நிகண்டில் முதலெழுத்து மட்டுமே அகர வரிசையில் அமைக்கப்பெற்றுள்ளது. இந்நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் பன்னிரண்டு தொகுதிகளைக் கொண்ட உரிச்சொல் நிகண்டு தோற்றம் பெற்றது.

கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் பதினொரு இயல்களில் அந்தாதி அமைப்பில் பொருள் கூறும் கயாதரநிகண்டும், மூன்று காண்டங்களைக் கொண்ட பல்பொருள் சூடாமணி நிகண்டும், ஐம்பத்தாறு பிரிவுகளைக் கொண்ட கைலாச நிகண்டு சூடாமணியும் வெளிவந்தன. கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் பன்னிரண்டு தொகுதிகளைக் கொண்ட பாரதி தீபம், பதினொரு தொகுதிகளைக் கொண்ட ஆசிரிய நிகண்டு, பதினெட்டுத் தொகுதிகளைக் கொண்ட அரும் பொருள் விளக்க நிகண்டு, சுப்பிரமணிக் கவிராயரின் தொகை நிகண்டு, பொருள் தொகை நிகண்டு ஆகியன வெளிவந்தன.

கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இரு பகுதிகளைக் கொண்ட பொதிகை நிகண்டு, நான்கு படலங்களைக் கொண்ட

நாமதீப நிகண்டு, இருபத்திநான்கு கட்டளைகளைக் கொண்ட கந்தசுவாமியம், வேதகிரி முதலியாரின் தொகைப்பெயர் விளக்கம், தொகை எண்களால் குறிக்கப்படும் பொருட்களை அறிந்து கொள்ள உதவும் இலக்கியத் திறவுகோல், எதுகை முறையில் அமைந்த நாநார்த்த தீபிகை நிகண்டு, வைத்தியலிங்கம் பிள்ளையின் சிந்தாமணி நிகண்டு, கோபாலசாமி நாயக்கரின் அபிதானத் தனிச் செய்யுள் நிகண்டு ஆகியன வெளிவந்தன.

எதுகை முறையில் சொற்பொருள் கூறும் விரிவு நிகண்டு வட்டார வழக்குச் சொற்களுக்கும் பொருள் கூறுகின்றது. இதனைத் தொடர்ந்து வடமொழிச் சொற்களுக்குப் பொருள் கூறும் ஆரிய நிகண்டு, விருத்தப்பாக்கள் வாயிலாகச் சொற்பொருள் கூறும் பொதிய நிகண்டு, மருத்துவம், மாந்திரீகம் போன்றவை தொடர்பானவைகளுக்கு விளக்கம் தரும் அகத்தியர் நிகண்டு, போகர் நிகண்டு, கால நிகண்டு, காரக நிகண்டு என்னும் வானநூல் நிகண்டுகள் தோற்றம் பெற்றன.

ஈண்டுக் குறிப்பிடப்பெற்ற அகராதிகள் அனைத்தும் செய்யுள் வடிவில் அமைந்தவை. இவற்றுள் சில அகராதிகள் மட்டுமே முதலெழுத்தளவில் அகர நிரலைப் பின்பற்றியுள்ளன. அகராதிப் பண்புகள் அனைத்தும் கொண்ட அகராதிகள் சில தமிழில் பதினேழாம் நூற்றாண்டில் தோற்றம்பெற்றன. அவற்றை ஈண்டு விரிவாகக் காணலாம்.

கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் முதலிரண்டு எழுத்தளவில் அகர நிரல் பின்பற்றப்பட்ட அகராதி மோனைக்கு அகராதி எதுகையும், பத்து தொகுதிகளைக் கொண்ட பத்துச்சொல் அகராதியும், பிரபந்த உரையின் அருஞ்சொற்கள் அகர வரிசைப் பெற்றமைந்த வைணவ விளக்கவுரை அருஞ்சொல் அகராதியும், வைணவச் சொற்களுக்குப் பொருள் கூறும் சம்பிரதாய அகராதியும், தமிழ் போர்த்துக்கீசிய இருமொழி அகராதியும் வெளிவந்தன.

கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் பர்த்தலமேயுஸின் டிக்னேஷியம் தமுலிகம் அகராதியும், பெஸ்கியின் சதுரகராதி,

தமிழ்—இலத்தீன் அகராதி, இலத்தீன்—தமிழ் அகராதி, தமிழ்—ஆங்கில அகராதி, போர்த்துக்கீசு—இலத்தீன்—தமிழ் அகராதி வட்டார வழக்குத்தமிழ் அகராதி ஆகியனவும், பெபிரிசியஸின் தமிழ்—ஆங்கில அகராதியும் வெளி வந்துள்ளன. பெஸ்கி தமது அகராதியில் அகர வரிசையினை அனைத்து எழுத்தளவில் பின்பற்றியதால் தமிழ் அகராதியின் தந்தை என அழைக்கப் பெறுகின்றார்.

கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிலின் என்பவரின் இரு பகுதிகளைக் கொண்ட பிரெஞ்சு — தமிழ் அகராதி யாழ்ப்பாணக்கிறித்தவர் சங்க வெளியீடான தமிழ் — ஆங்கில அகராதி, ஆங்கிலம் — தமிழ் அகராதி, தமிழ் — தமிழ் அகராதி ஆகியனவும் ராட்லரின் தமிழ் — ஆங்கில அகராதி, வின்சுலோ தமிழ் — ஆங்கில அகராதி, ஆங்கிலம்—தமிழ் அகராதி, யாழ்ப்பாணத்தமிழ் அகராதி, ஸ்பால்டிங் என்பவரின் ஆங்கிலம் — தமிழ் அகராதி, பெர்சிவலின் ஆங்கிலம்—தமிழ் அகராதி, மௌஸட், டுபுஸ் ஆகியோரின் இலத்தீன் — பிரெஞ்சு—தமிழ் அகராதி, கிருஷ்ணசாமி பிள்ளையின் ஆங்கிலம்—தெலுங்கு—தமிழ் அகராதி, தமிழ்—பிரெஞ்சு அகராதி, பிரெஞ்சு—தமிழ் அகராதி ஆகியன தோற்றம்பெற்றன.

இவற்றைத் தொடர்ந்து புதுவை மாதாகோவில் அச்சகத்தாரின் சிறிய தமிழ் — பிரெஞ்சு அகராதி, குரி பாதிரியாரின் தமிழ் — இலத்தீன் அகராதி, சென்னை மாகாணக்கல்வி இயக்குநரின் தமிழ் — ஆங்கில அகராதி, கிரந்த எழுத்திலுள்ள சமஸ்கிருத சொற்களுக்குத் தமிழ்ச் சொற்களால் பொருள் கூறும் பதார்த்த பாஸ்கரம், வீரசாமிப் பிள்ளையின் ஆங்கிலம் — தமிழ் அகராதி, விஜயரங்க முதலியாரின் தமிழ் கையடக்க அகராதி, விசுவநாத பிள்ளையின் தமிழ் — ஆங்கில அகராதி, தரங்கம்பாடித் தமிழ்ச்சங்கத்தின் தரங்கம்பாடி அகராதி ஆகியனவும் தோற்றம் பெற்றன.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சித்தர்களின் வைத்திய மூலிகை அகாரதி, வைத்திய மூலிகை விரிவகராதி,

கதிரைவேற்பிள்ளையின் தமிழ்ச் சொல் அகராதி, குப்புசாமி-நாயுடுவின் தமிழ்ப்பேரகராதி, இரத்தினவேலு முதலியாரின் சிறப்புப் பெயர் அகராதி, இராமநாதனின் இருபதாம் நூற்றாண்டுத் தமிழகராதி, சுவாமிநாத ஐயரின் ஆங்கிலம் — ஆங்கிலம் — தமிழ் அகராதி, கட்டுரை போன்ற விளக்கங்களையுடைய அபிதான சிந்தாமணி, நாகலிங்க முதலியாரின் கார்னேசன் தமிழ் மொழி அகராதி, குமாரசாமிப் பிள்ளையின் இலக்கியச்சொல் அகராதி, சங்கரநாராயண பிள்ளையின் ஆங்கிலம் — தமிழ் — ஆங்கில அகராதி, நமச்சிவாய முதலியாரின் தமிழ் மொழி அகராதி, விசாகப்பெருமாளின் தமிழ் அகராதி ஆகியன வெளிவந்தன.

இதனைத் தொடர்ந்து கிளாய்டனின் தமிழ்ப்பைபிள்அகராதி, சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் பேரகராதித் தொகுதிகள், பவானந்தம் பிள்ளையின் தற்காலத் தமிழ் அகராதி, கே.வி.சுப்பையாவின் பள்ளி மாணவர்க்குரிய ஆங்கிலம் — தமிழ் — ஆங்கிலம் அகராதி, சங்கரலிங்க முதலியாரின் ஜூபிலி தமிழ்ப்-பேரகராதி, ஆனந்த விகடன் சித்திரப்போட்டி அகராதி, இராம-நாதனின் ஆங்கிலம்—தமிழ் அகராதி, கோபாலகிருஷ்ணனின் மதுரைத் தமிழ்ப் பேரகராதி, வெங்கடேச சர்மாவின் தமிழ் சமஸ்கிருத அகராதி, நீலாம்பிகையின் வட சொல் தமிழ் அகர-வரிசை, ஞானப்பிரகாச அடிகளின் சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி, திருநெல்வேலி-சென்னைத் தமிழ்ச்சங்கம் வெளியிட்டுள்ள ஒன்பது பிரிவுகளைக் கொண்ட கலைச்சொல் அகராதி, சாமி வேலாயுதம் பிள்ளையின் கலைச் சொற்கள், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தில் கழகத்தமிழ் அகராதி ஆகியன வெளிவந்தன.

இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஆனந்த விகடன் போட்டி ஆசான், அரசு வெளியிட்டுள்ள நகர நாட்டாண்-மைக்கழக ஆட்சி முறைச் சொல்லகராதி, சுந்தர சண்முகனாரின் இலக்கண அகராதி, நடராசனின், கார்த்திகேயினி புதுமுறை அகராதி, லிப்கோ ஆங்கிலம் — ஆங்கிலம் — தமிழ் அகராதி,

தமிழ் — தமிழ் அகராதி, கந்தையா பிள்ளையின் செந்தமிழ் அகராதி, திருக்குறள் அகராதி, காலக் குறிப்பு அகராதி ஆகியன, சாமி வேலாயுதம் பிள்ளையின் திருக்குறள் அகர வரிசை, திருக்குறள் சொல்லடைவு, இராகவனின் சங்கர் ஆங்கிலம் — ஆங்கிலம் — தமிழ் அகராதி ஆகியன வெளிவந்தன.

இவற்றைத் தொடர்ந்து சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் கழக ஆங்கிலத் தமிழ் அகராதி, கழகப் பழமொழி அகர வரிசை ஆகியன, கந்தையாவின் தமிழ்ப்புலவர் அகராதி, தமிழ் இலக்கிய அகராதி ஆகியன, அவினாசிலிங்கம் பதிப்பித்த கலைக் களஞ்சியத் தொகுதிகள், ஐயம்பெருமாள் கோனாரின் கோனார் தமிழ் கையகராதி, ஆங்கிலம் — ஆங்கிலம் — தமிழ் பொருள் கூறும் இக்காலக் கலைமகள் கையடக்க அகராதி, பாலூரின் தமிழ் இலக்கிய அகராதி, இராசாமிப் புலவரின் தமிழ்ப்புலவர் அகர வரிசை, இராமலிங்கனாரின் தமிழ் ஆட்சிச் சொற்கள், திராவிட மொழிச் சொற்களின் மூலவடிவத்தினைக் காணும் வகையில் அமைந்த திராவிட மொழி சொற்பிறப்பு வரலாற்று அகராதி ஆகியவை தோற்றம் பெற்றன.

இன்னமும் அரசு வெளியிட்ட ஆட்சிச்சொல் அகராதி, பாபநாசம் சிவனின் சமஸ்கிருதம் — தமிழ் அகராதி, பார்த்தசாரதி ஐயங்காரின் நாலாயிர திவ்விய பிரபந்த அகராதி, சென்னைப் பல்கலைக்கழக வெளியீடான சிதம்பரநாதச் செட்டியாரின் ஆங்கிலம் — ஆங்கிலம் — தமிழ் அகராதி, சதாசிவத்தின் அடுக்கு மொழி அகராதி, எதிர்ப்பத அகராதி ஆகியன இந்நூற்றாண்டின் பிற்பகுதியில் வெளிவந்த அகராதிகளில் குறிப்பிடத்தக்கவை.

50. அகரரதி ஆதிக்கம்

அகராதி ஆக்கம் (dictionary compilation) தயாரித்தல் (preparation), தணிக்கை (editing), அச்சகப்படி ஆக்கம் (preparation of press copy) என்னும் மூன்று நிலைகளில் அமையப் பெறும்.

5.1.0. முதல் நிலையில் திட்டமிடுதல் (planning), செய்தி சேகரித்தல் (collection), சொல் தேர்வு (selection) ஆகியன அமையப்பெறும்.

5.1 1 அகராதி தயாரிக்கத் தேவைப்படும் காலம், அகராதியின் வகை, பயன்படுத்தப்படும் மொழி, நோக்கம், பயன், பொருட் செலவு ஆகியவற்றை முறையாக அறிந்து திட்டமிடல் வேண்டும். செய்தி சேகரிப்பதில் ஒவ்வொரு வகை அகராதிகளுக்கேற்ப தரவு வேறுபடும். இலக்கிய வடிவமில்லா மொழிகளுக்குக் கள ஆய்வின் வாயிலாகச் செய்தியினைச் சேகரித்தல் வேண்டும். ஒவ்வொரு சொற்களுக்கும் தனித்தனி அட்டை அமைத்து எண் இடப்படல் வேண்டும். அகராதிச் சொற்களை (lexicographic words) முறையாகப் பகுத்துக்காண்டல் வேண்டும்.

5.1.2. அகராதியின் வடிவம் (size), வகை (type). குறிக்கோள் ஆகியவற்றிற்கேற்பச் சொல் தேர்வு அமையும். வழக்கிறந்த சொற்கள், அருகிய சொற்கள், புதிய சொற்கள், கலைச் சொற்கள், பழமொழிகள், சுருக்கக் குறியீடுகள், ஒட்டுக்கள், மேற்கோள் போன்றவற்றில் எவற்றைத் தெரிவு செய்ய வேண்டும் என்பது ஈண்டு வரையறை செய்யப்படும்.

5.2.1 0 சொற்களைத் தணிக்கை செய்யும் இரண்டாவது நிலையில் தலைமைச் சொல் தேர்வு, ஒலிப்புமுறை குறிக்கப்பெற வேண்டிய பான்மை, இலக்கணத்தொடர்பான செய்திகளைச் சுட்டும் பான்மை, பொருள் குறிக்கப்படுதல், சான்றுகள், வரைபடங்கள் வாயிலாகக் கருத்து நிறுவப்பெறும்பான்மை, சொல்லாக்கம், மரபுத்தொடர்களைக் கையாளும் நிலை, சொற்பிறப்பு வரலாறு, ஒரு பொருள் பலச்சொல், எதிர்பதச்சொல் போன்றவை முறைப்படுத்தப்படும்.

பொருளை விளக்குவதற்கு விளக்கம் (definition) கொடுத்தல், பொருளிணைச் சொற்களைக் (equivalents) கொடுத்தல்,

சான்றாதாரங்களைக் கொடுத்தல், குறுக்க விளக்கங்களைப் பயன்படுத்துதல் போன்ற உத்திகள் கையாளப்படலாம். அகராதி தரும் சொற்பொருள் விளக்கம் சுருக்கமாகவும், தெளிவாகவும் மயக்கமின்றியும் அமைதல் வேண்டும். பொருளிணைச் சொல்லும் தலைமைச் சொல்லும் ஒரே சொல்வகையினைச் (part of speech) சார்ந்தவையாக அமைத்தல் வேண்டும். பொருளை முழுமையாக விளக்கப் பொருட்-கூற்றாய்வு (componential analysis) கையாளப்படலாம்.

தேவைப்படுமாயின் கூறியது கூறல் (repetition) அமையலாம். பொருள் விளக்கத்திற்கு இலக்கிய மேற்கோள், வரைபடங்கள் (pictures) போன்றவை பயன்படுத்தப்பெறலாம். சொல் பொருள் (semantic gloss), இலக்கணப் பொருள் (grammatical gloss), அனைத்தையும் உள்ளடக்கிய பொருள் (encyclopaedic gloss) என்னும் மூன்று நிலைகளில் பொருள் விளக்கம் அமையப் பெறலாம்.

5.3.0 அச்சகப்படி தயாரிக்கப்பெறும் மூன்றாவது நிலையில் சொற்கள் நிரல்படுத்தப்பெறும். அகர நிரல் (alphabetical arrangement), பொருண்மை நிரல், (Semantic arrangement) சொல்லாக்க நிரல், (derivational arrangement), கோட்பாட்டு நிரல் (concept arrangement), இறுதி நிலை அகர நிரல் (reverse arrangement) போன்ற முறைகளில் அகராதிக்கு ஏற்ற வகையில் சொற்கள் நிரல்படுத்தப்படும்.

ஒரே வகையான எழுத்தமைப்புக் கொண்டு ஒலிப்பு முறை-வேறுபடும் சொற்கள் (homographs), வேறுவகை எழுத்தமைப்புக் கொண்டு ஒரே வகையான ஒலிப்பு முறையுடைய சொற்கள் (homophones) போன்றவற்றைக் கவனத்துடன் கையாளவேண்டும். பலமொழிச் சொற்கள் கையாளப்பெறும் அகராதிகளில் சொற்கள் எண்ணிக்கை குறிக்கப்பெறும். ஒருபொருள் பல சொல்லைத் தனித்தனியே கூற வேண்டுமா அன்றிச் சேர்த்துக்கூற வேண்டுமா என்பது இவண் முடிவு செய்யப்படும். பல பொருள் ஒரு சொல்லில் பெரிதும் பயின்று வரும் பொருளுக்கு முதன்மையிடம் அளிக்கப்படல் வேண்டும்.

இடச்சுருக்கீடு (nesting) வாயிலாக அகராதியில் இடத்தைச் சுருக்கவும், அகராதியினைச் சிறிதாகவும் அமைக்க முடியும். சொற்களுக்குக் கூடுதல் விளக்கம் தரத் துணைச் சேர்க்கையினைப் (sub-entry) பயன்படுத்தலாம்.

6 0 அகராதியின் எண் குறியீடும் கட்டமைப்பும் :

அகராதியினைப் பயன்படுத்துவோர் நலன் கருதி எண் குறியீடு (notation) அகராதியில் இடம் பெறும். எண் குறியீடு முதல் சேர்க்கைக் குறியீடு (entry proper notation), துணைச்சேர்க்கைக் குறியீடு (extra entry notation) என இரண்டு வகையாக அமையப்பெறும்.

6 1.0. துணைச் சேர்க்கைக் குறியீடு தலைப்பு, முன்னுரை, வாசகர் வழிகாட்டி சுருக்கக் குறியீடுகள், பக்க அமைப்பு (pagination) முதலியவற்றைச் சுட்டும் வகையில் அமையும். முதல் சேர்க்கைக் குறியீடு அகராதியில் பயன்படுத்தப் பெற்ற எழுத்துக்கள், அவற்றின் வடிவநிலை, நிறுத்தக் குறியீகள் (punctuation), அச்சு இடைவெளி (space), அடையாளக் குறியீடுகள் (symbol) போன்றவற்றை சுட்டும் வகையில் அமையும்.

6 2.0. அகராதியின் கூட்டமைப்பு (format) கண்ணைக் கவரும் வகையில் அமைதல் வேண்டும். சீர்மையான எழுத்து வடிவம் பயன்படுத்தப்படல் வேண்டும்.

7 0, சிறந்த அகராதி

கலாச்சாரக் கூறுகள் முழுமையும் பிரதிபலிக்கும் வகையில் சொற்பிரிப்பில் சீர்மை காணப்பெறும் வகையிலும், நிகழ்காலச் சொற்களையும் உள்ளடக்கும் நிலையிலும், பொருளை விளங்க வைப்பதிலும், தேசீய ஒருமைப்பாட்டினை வளர்க்கத் துணை புரிவதிலும் முழுமை பெற்று அமையும் அகராதியே சிறந்த அகராதி எனப்படும்,

பல்வகை அகராதிகள் தோற்றம் பெற்றிருப்பினும் அனைத்துத் துறைகளுக்குரிய அகராதிகள் தமிழில் இன்னமும் ஆக்கப்பெறவில்லை. அகராதிகள் தயாரிக்கப் பல ஆய்வுத் திட்டங்கள் இருந்த போதிலும் குறிக்கோள் முழுமை பெறவில்லை. அகராதிகள் தயாரிக்க தக்க பயிற்சி உடையவர்கள் பயன்படுத்தப்படல் வேண்டும். கணிப்பானின் துணையினைத் தேடிக்கொள்வது சிறப்புடைத்து.

— டாக்டர். ஏ. ஆதித்தன்

பரிமேலழகர் உரை — சில செய்திகள்

தமிழ் உரை இலக்கிய வரலாற்றில் உரையாசிரியர்க்கு உரிய இடம் பெருஞ்சுட்டுக்கு உரியது. தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களுக்கும் திருக்குறள் முதலிய இலக்கியங்களுக்கும் உரை வகுத்த சான்றோர் பலர். அவர்தம் அறிவின் நுட்பமும் திட்பமும் ஒட்பமும் பெருவியப்புப் பயப்பனவாம். அவ்வுரையாசிரியர் திரலில் ஒருவரான பரிமேலழகர் ஈண்டைய ஆராய்ச்சிக்குரிய புலவராவர். அவரது புகழுக்கு உரைகல்லாக விளங்குவது அவரது திருக்குறள் உரை என்பது தேற்றம். அவ்வுரையில் காணப்படும் சில செய்திகளைத் தொகுத்துச் சுட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

முதற்கண் திருக்குறள் உரையில் பரிமேலழகர் எடுத்தாண்டுள்ள இலக்கண இலக்கிய நூல்களை அகவரிசைப்படுத்திக் கொள்வோம். அவையாவன:

1. அகநானூறு
2. இறையனார்களவியல்
3. ஏரம்பம்
4. கம்பராமாயணம்
5. கலித்தொகை
6. குறுந்தொகை
7. சிந்தாமணி
8. சிலப்பதிகாரம்
9. திரிகடுகம்
10. திருக்கோவையார்
11. திருவாய்மொழி
12. தொல்காப்பியம்
13. நாலடியார்
14. நான்மணிக்கடிகை
15. நற்றிணை
16. நெடுநல்வாடை
17. பட்டினப்பாலை
18. பதிற்றுப்பத்து
19. பரிபாடல்
20. பழமொழி
21. புறநானூறு
22. புறப்பொருள் வெண்பாமாலை
23. பொருநராற்றுப்படை
24. மணிமேகலை
25. முத்தொள்ளாயிரம்
26. வளையாபதி

மேற்கண்ட இருபத்தாறு நூல்களுள் தொல்காப்பியம், இறையனார்களவியல், புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய

மூன்றும் இலக்கண நூல்கள்; ஏரம்பம்[1] என்பது கணித நூலாக இருத்தல் வேண்டும் என எண்ண இடம் உண்டு. ஏனைய இருபத்து இரண்டு நூல்களும் இலக்கியத்தைச் சார்ந்தவை. அவற்றை வகைப்படுத்தி நோக்கின், எட்டுத்தொகை, பத்துப் பாட்டு, பதினெண் கீழ்க் கணக்கு, ஐம்பெருங்காப்பியம், இதிகாசம், திருமுறை, திவ்வியப்பிரபந்தம் ஆகிய இலக்கியப் பிரிவுகள் அவர் உரையில் இடம் பெற்றுள்ளமை புலனாகும். ஆயின், அவர் யாண்டும் இக்குறியீடுகளைப் பயன்படுத்தினார் அல்லர். அன்றி-யும் அவர் எந்நூலையும் அதன் பெயரால் சுட்டினாரும் அல்லார். நூலாசிரியர் பெயரும் அவரது உரையில் குறிக்கப்படவில்லை. ஏரம்பம் ஒன்றே பெயர் சுட்டப்பட்டுள்ளது.

இனித் தொகைநூல்கள் எட்டனுள் ஐங்குறுநூறு மட்டில் அவரது உரையுள் இடம் பெறவில்லை. பத்துப்பாட்டுள் பொரு-நராற்றுப்படை, நெடுநல்வாடை, பட்டினப்பாலை ஆகிய மூன்றுமே சுட்டப்பட்டுள்ளன; எஞ்சிய ஏழும் இடம் பெறவில்லை. ஐம்-பெருங்காப்பியங்களுள் குண்டலகேசி மட்டில் குறிக்கப்படவில்லை. கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டனுள் நாலடியார், நான்மணிக் கடிகை, திரிகடுகம், பழமொழி ஆகிய நான்கொழிய எஞ்சிய பதினான்கும் இடம் பெறவில்லை. இதிகாசங்களுள் கம்பராமா-யணம் ஒன்றே எடுத்தாளப்பட்டுள்ளது. பாரதம் சுட்டப்பட-வில்லை. சைவ வைணவ நூல்களுள் திருக்கோவையார், திரு-வாய்மொழி இவை இரண்டுமே ஆளப்பட்டுள்ளன. தேவார திருவாசகங்கள் உரையில் இடம் பெறாமைகவனிக்கத்தகும். முத் தொள்ளாயிரம் பரிமேலழகரின் உள்ளத்தைத் தொட்டுள்ளமையும் சுட்டுக்குரியதாம்

பரிமேலழகர் தமது உரையில் புறநானூற்றை இருபத்-தைந்து இடங்களிலும், நாலடியாரைப் பத்தொன்பது இடங்களிலும் சீவகசிந்தாமணியைப் பதினான்கு இடங்களிலும், கலித்தொகையை பதினான்கு இடங்களிலும் மேற்கோள் காட்டியுள்ளார். இலக்கண நூல்களுள் புறப்பொருள் வெண்பா மாலையைப் பெரிதும் பயன்-படுத்தியுள்ளார். அவர்தம் உரையில் ஓரிடத்து மட்டும் குறிக்கப் பட்டுள்ள நூல்கள் பழமொழி, திருக்கோவையார், நெடுநல்வாடை, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, பொருநராற்றுப்படை, முத்தொள்-ளாயிரம், மணிமேகலை, கம்பராமாயணம் ஆகிய நூல்களாகும்.

---

1) குறள். 399 உரை.

மேலே கண்ட இலக்கிய மேற்கோள்களே அன்றி, நாட்டிலே நாளும் வழங்கும் எளிய பழமொழிகளும் அவரது உரையில் எடுத்தாளப்பட்டுள்ளன. கல்வி என்னும் அதிகாரத்தில் கல்வி கற்றான் ஒருவன் தான் இன்புறுதற்கு உலகு இன்புறுதலை விளக்குங்கால், 'கரும்பு அயிறற்குக் கூலிபோல'[1] என்னும் நாட்டு மொழியை மேற்கோள் காட்டியுள்ளார் பரிமேலழகர்.

இனி, அவர் மேற்கோள் காட்டும்முறை கவனத்திற்கு உரியது. திருக்குறட் சொற்கள் சிலவற்றின் அரிய பொருளை விளக்குவதற்கு ஒத்த இலக்கியத் தொடர்களை மேற்கோள் காட்டிச் செல்வது அவரது வழக்கம்.

''இனந்தூய்மை தூவா வரும்''[1] என்னும் குறள் தொடரில் 'தூ' என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்குப் 'பற்றுக்கோடு' என்னும் பொருள் கொண்ட கலித்தொடர் ஆகிய 'தூ வறத்துறந்-தாரை'[2] என்பதனை எடுத்துக் காட்டி, 'தூ' என்பது அப்-பொருட்டாதல் காண்க என்று விளக்கியுள்ளார். அன்றியும், 'மனக்கவலை மாற்றல் அரிது'[3] என்னும் குறள் தொடரில் 'அரிது' என்பதற்கு இன்மைப் பொருள் கொண்டு, அதனை விளக்குமுகத்-தால், 'உறற்பால தீண்டா விடுதல் அரிது'[4] என்னும் நாலடியார் பாடல் அடியை மேற்கோள் காட்டினார். இவ்வாறு வள்ளுவர் வாய்மொழிகள் சிலவற்றின் பொருள் நுட்பத்தைப் புலப்படுத்த ஏற்ற இலக்கியங்களிலிருந்து உரிய தொடர்களை மட்டில் சுட்டிக் காட்டிச் செல்வர் பரிமேலழகர்.

இனிப் பாடல் முழுமையும் மேற்கோள் காட்டும் இடங்களும் பல உள. காட்டாக ஒன்று காண்போம். 'மறன் இழுக்கா மான-முடையது அரசு'[5] என்னும் தொடருக்குப் பொருள்விளக்கம் செய்யப் புகுந்த பரிமேலழகர், 'வீரத்தின் வழுவாத தாழ்வு இன்மையினை

1) குறள். 455 உரை.
2) கலி. நெய்தல். 1.
3) குறள். 7.
4) நாலடி. 109
5) குறள். 384.

உடையான் அரசன்' எனச் சொற்பொருள் விரித்து, குற்றமாய மானத்தின் நீக்குதற்கு 'மறன் இழுக்கா மானம்' என்றார் என்று கூறியதோடமையாது,

[6]"வீறின்மையின்விலங்காம் என மதவேழமும் எறியான்
ஏறுண்டவர் நிகராயினும் பிறர் மிச்சில் என்று எறியான்
மாறன்மையின் மறம் வாடும் என்று இளையாரையும் எறியான்
ஆறன்மையின் முதியாரையும் எறியான் அயில் உழவன்"

என்னும் சிந்தாமணிப் பாடல் முழுவதும் எடுத்துக்காட்டித் தெளிவுறுத்தியும் உள்ளார்.

மேலும், முதற்கண் மேற்கோள் பகுதிக்குரிய இடமும் பொருளும் சுட்டிப் பின்னர் அம்மேற்கோள் அடிகளைக் காட்டிச் செல்லும் இடங்களும் சில உள.

"ஊராண்மை மற்றதன் எஃகு" என்னும் தொடரில் 'ஊராண்மைக்கு' 'உபகாரியாம் தன்மை' எனப் பொருள் உரைத்து, மேலும் விளக்குமுகத்தால், 'அஃதாவது இலங்கையர் வேந்தன் போரிடைத் தன் தானை முழுதும் படத் தமியனாய் அகப்பட்டானது நிலைமை நோக்கி அயோத்தியர் இறை மேற்செல்லாது, 'இன்று போய் நாளை நின்தானையொடுவா' என விட்டாற் போல்வது என்று கூறியுள்ளார், இங்குக் கம்பராமாயணத் தொடராகிய, 'இன்று போய்ப் போர்க்கு நாளை வா'[1] என்பதன் கருத்தைப் பரிமேலழகர் ஆண்டுள்ளமை புலனாகும்.

இவ்வாறே பரிமேலழகர் 1330 அருங்குறட்பாக்களுக்கும் அரிய உரை கண்டுள்ளமையும், தமக்கு முன் வாழ்ந்த சான்றோர் பலரின் பொன்மொழிகளைப் போற்றியுள்ளமையும் அறிந்து மகிழத்தகும். அவரது உரையைத் தொகுத்து நோக்கின் இலக்கிய

---

6) சிந்தாமணி. 2261.

மணம் கமழும் என்பதில் ஐயமில்லை. இதுகாறும் கூறியவற்றி லிருந்து கீழ்க்காணும் சில செய்திகள் விளக்கமுறும்.

1. பரிமேலழகர் பரந்த நூற்பயிற்சி உடையவர். சான்றோர் நூலுக்கு உரை காண்டற்கு வேண்டும் முதல் தகுதி இது இவர் மதி நுட்பம் நூலோடு உடையவர்.

2. சமய வெறுப்பின்றி எல்லாச் சமய நூல்களினின்றும் மேற்கோள் காட்டியுள்ளார். ஐயனாரிதனார் அருளிய புறப்பொருள் வெண்பாமாலை, திருத்தக்கதேவர் அருளிய சிந்தாமணி, சீத்தலைச் சாத்தனார் அருளிய மணிமேகலை, மாணிக்கவாசகர் அருளிய திருக்கோவையார், நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி முதலிய நூல்களைச் சுட்டியுள்ளமையால் புத்தம், சமணம், சைவம், வைணவம் ஆகிய நால்வகைப் பெருஞ் சமயங்களையும் போற்றியுள்ளமை புலனாகும். கம்பரை மேற்கோள் காட்டிய இவர் சேக்கிழார் பெருமானையும் சமயங்கொண்டாரையும் ஏற்ற இடங்களில் சுட்டாமை சிந்திக்கத்தகும்.

3. இவர் காட்டிய மேற்கோள் நூல்களில் காலத்தால் பிந்தியது கம்பராமாயணம். விலலிபாரதம் சுட்டப்படவில்லை. எனவே இவரது காலம் கம்பருக்கும் வில்லிபுத்தூரார்க்கும் இடைப் பட்ட காலம் ஆகலாம். அஃதாவது கி.பி. 12 முதல் 15 வரை உள்ள காலப்பகுதியாகும். மேலும் ஆராயின் இன்ன நூற்றாண்டினராகலாம் என்பது தெளிவுறும்.

4. தொல்காப்பியத்தைச் சுட்டியுள்ளார் எனினும், பெரும்பாலும் பிற்கால இலக்கண நூல்களாகிய இறையனார் களவியல், புறப்பொருள் வெண்பாமாலை முதலியனவே இவரால் பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

5, நச்சினார்க்கினியர், பேராசிரியர் போன்றோர் தொகை, பாட்டு, கணக்கு முதலிய இலக்கியப் பிரிவுகளுக்குரிய குறியீடுகளை உரையில் சுட்டிச் செல்லவும், பரிமேலழகர் தமது உரையில் யாண்டும் அங்ஙனம் சுட்டாமைக்குரிய காரணம் ஆராய்தற்குரியது. ஒருகால் அவர் காலத்துக்குப் பின்னரே அக்குறியீடுகள் வழக்குப்

1) கம்பராமாயணம் யுத். 773.

பெற்றிருக்குமோ என ஐயுறத் தோன்றுகிறது. அன்றி அவ்வாறு குறியிட்டாளும் வழக்கம் அவரிடம் இல்லை எனவும் கொள்ளலாம்.

6. அவர் மேற்கோள் காட்டிய நூல்களும் ஏரம்பம் ஒன்றே இன்று கிடைத்திலது.

7. வடமொழி நூல்களிலும் நிரம்பிய புலமையுடையவர் எனக் கொள்ளுதல் தகும். திருக்குறள் உரையில் வடமொழி நூற்போக்கினை உடன்பட்டும் மறுத்தும் செல்கின்றார். சில இடங்களில் ஒத்த கருத்துடைய வடமொழி வாசகப் பொருளை எடுத்துக்காட்டிச் செல்கிறார்.

8. வேண்டும் இடங்களில் நுட்பமான இலக்கணக் குறிப்புக்களை வழங்கியுள்ளார். இதுபற்றித் தனி ஆராய்ச்சி வேண்டும்.

9. இவர் தமது உரையில் மேற்கோள் நூலாசிரியர் பெயரைச் சுட்டும் வழக்கம் உடையவர் அல்லர். ஆயினும் ஓரிடத்து மட்டும் திருவாய்மொழி ஆசிரியரைப் 'பெரியார்' என்று பெருமை தோன்றக் குறிப்பிட்டுள்ளார். இதுகொண்டு இவரது சமயச் சார்பு ஒருவாறு புலனாகும்.

— பேராசிரியர் டாக்டர். நா. பாலுசாமி

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடுகள்

1. மதுரைத் தமிழ்ச்சங்க வரலாறு 12-00
2. பன்னூற்றிரட்டு 5-00
3. தமிழ்ச் சொல்லகராதி 25-00
4. மாறனலங்காரம் (பொருளணியியலுரை) 5-00
5 பெருந்தொகை (முதல் 50 பாடல்கள் மூலமும் உரையும்) 2-00
6. குருகைமான்மியம் 10-00
7. டி சி. ஸ்ரீநிவாசய்யங்கார் நினைவு மலர் 1-00
8. பெருந்தொகை 15-00
9. செந்தமிழ்த் தொகுதி அட்டவணைக் குறிப்பு 5-00
10. செந்தமிழ்த் தொகுப்பு (ஓர் ஆண்டு) 10-00
11. **கோவை. கலம்பக நூல்கள்** 12-00
    1. மாறனகப் பொருளும் திருப்பதிக் கோவையும்
    2. மதுரை மும்மணிக் கோவை
    3. சிராமலைக்கோவை
    4. கலசைக் கோவை
    5. திருக்கலம்பகம் (மூலமும் உரையும்)
    6. திருவருணைக் கலம்பகம்
    7. குருமொழி வினாவிடை
12. **உலா நூல்கள்** 10-00
    1. திருவாரூருலா
    2. திருச்சிறு புலியூர் உலா
    3. விக்கிரம சோழனுலா
    4. கடம்பர் கோவில் உலா
    5. தேவையுலா
    6. புலவராற்றுப்படை
13. **பாமாலை நூல்கள்** 12-00
    1. திருப்பணிமாலை
    2. சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப் பாமாலை (மூலமும் உரையும்)
    3. திருக்குற்றாலமாலை
    4. திருப்புல்லாணிமாலை
    5. திணைமாலை நூற்றைம்பது (மூலமும் உரையும்)
    6. கேசவப் பெருமாள் இரட்டைமணிமாலை
    7. கலைசைச் சிலேடை வெண்பா
    8. திருவாரூர் நான்மணிமாலை (மூலமும் உரையும்)

14. **இலக்கிய நூல்கள்** 12-00

1. முத்தொள்ளாயிரச் செய்யுள்
2. ஐந்திணையைம்பது
3. திருநூற்றந்தாதி (மூலமும் உரையும்)
4. பழமொழி (மூலமும் உரையும்)
5. சங்கர நயினார்கோவில் அந்தாதி
6. திருத்தணிகைத் திருவிருத்தகம்
7. நான்மணிக் கடிகை (மூலமும் உரையும்)

15 **இலக்கண நூல்கள்** 5-00

1. அரும்பொருள் விளக்க நிகண்டு
2. பன்னிரு பாட்டியல்
3. அநுமான விளக்கம்

16. **மநிஷா பஞ்சகம்** 6-50

1. மநிஷா பஞ்சகம்
2. ஞானாமிர்தக் கட்டளை
3. அட்டாங்க யோகக் குறள்
4. இராமோதந்தம்

* * *

செந்தமிழ்

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய இவ்விதழ் ஆண்டுக்கு நான்குமுறை வெளியிடப்பெறுவது. ஆண்டுச் சந்தா ரூ 8-00. செந்தமிழைக் கண்ணுறும் தமிழன்பர்கள் சந்தாதாரராகச் சேர்ந்து பிறரையும் சந்தாதாரராகச் சேரத்தூண்டி இதழின் வளர்ச்சிக்கு உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

குறிப்பு :

1. புத்தகங்கள் வேண்டுவோர் தேவைக்கு எழுதும் பொழுது 25 விழுக்காடு முன் பணம் அனுப்ப வேண்டும். பாக்கித் தொகைக்கு நூல்கள் வி.பி.பி. மூலம் அனுப்பப்படும்.
2. விற்பனையாளர்களுக்கும், நூலகத்திற்கும் 15 விழுக்காடு கழிவு கொடுக்கப்படும்.
3. நூல்கள் அனுப்புவதற்கான செலவுகளை வாங்குபவரே ஏற்க வேண்டும்.

செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 1

நியூ ரத்னா பிரஸ், மதுரை-20.